திருவள்ளுவர் ஆண்டு 2049 மகர25-மாசி25 (ஆங்கில ஆண்டு 07.02.2018-07.03.2018)

பொய்யாமொழி

கல்வி கலை
இலக்கிய சமூக இதழ்

தரம் 5 புலமைப்பரிசில்
மாதிரி வினாத்தாள்
உட்பட இன்னும் பல
கல்விசார் விடயங்கள்
(சிறுவர்கதை-தமிழ்,
ஆங்கிலத்தில்,
புதிர்கள்,விடுகதைகள்)

கட்டுரைகள்-
(பொதுவானவை)

கவிதைகள்-
(பொதுவானவை)

சிறுகதை-
(பொதுவானது)

ஆழியே முடினாலும் அனலே வீழ்ந்து எரிந்தாலும்
காலம் இயக்கும், சுழிர்ப்பின் விதியை... காயம் ஆற்றி,
இயற்கை ஊட்டும், நம்பிக்கை... இனம்புரியாத புதிர்!

உள்ளடக்கம்...

கட்டுரைகள்

தமிழ்மொழியின் சிறப்பு....4
எண்ணஅலைகளுக்குள் அள்ளுணடு போவதா? மீள்வதா? 9
கலையும் மனிதனும் .... .12
எனது மனச்சாட்சியின்படியே நான் வாக்களிப்பேன் 14
காத்திருக்கும் விதை 17
காடுகளை வளர்ப்பதில் பறவைகளின் பணி 19
தமிழர் தொன்மையும் தமிழ் மருத்துவமும்.... 56
ஜனநாயக நாடுகளில் நிலைத்த அமைதிக்கான முயற்சி.... 63

கல்விப்பகுதி

தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்...22
தொழிலாளர்களுக்கு...! (சிறுவர்கதை -தமிழ்)....38
சிறுவர்கதை (ஆங்கிலம்) PETER RABBIT....40
ஆங்கிலச்சொற்களைக் கண்டுபிடித்தல்(Word search)....52
குறுக்கெழுத்துப் புதிர்....54
புதிய விடுகதைகள்....55

சிறுகதை -ஆலமரம்....60

கவிதைகள்

உலகம் உன்னைப் பார்த்து (கவிஞர் வைரமுத்து) 7
கவிதைக்கோலம்....13

மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிஞர்தம் இதய ஓடை ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணேஉன் நலம்காணார் ஞாலம் காணார்.
----பாவேந்தர் பாரதிதாசன்

உலகின் மூலைமுடுக்குகளை எல்லாம் நொடிப்பொழுதில் காணக்கூடிய தொழில்நுட்பக் கருவிகள் நம் கைவிரல் நுனிகளில் உள்ளன. பல்வேறு மாற்றங்கள் உலகையே புரட்டிப் போடுகின்றன. ஆனால் நிகழும் அனைத்து மாற்றங்களும் உலக அமைதிக்கும் மனித மாண்புக்கும் வழிவகுக்கின்றனவா? என்ற கேள்விக்குரிய பதில் சிந்திக்கும் ஆற்றல் படைத்த மனிதர்கள் எல்லோருக்கும் தெரியும்.

காலத்தேவை உணர்ந்து, உலகநன்மை கருதி பல கேள்விகளையும் கருத்து களையும் முன்வைத்து, மனிதர்களின் சிந்தனைத்திறனை வலுவடையச் செய்ய வேண்டியது அவசியம். இணையத்தளங்கள் சமுதாயத் தொடர்பாடல் தளங்கள், ஒலி, ஒளி பதிவுகள் எனப் பல்வேறு வழிகளில் கருத்துகள் பரிமாறப்பட்டாலும், அவை எல்லாமும் சமுதாயத்தை நல்வழிப்படுத்துவனவாக உள்ளனவா? சமூக ஐக்கியத் தைக் கட்டியெழுப்பும் ஆற்றல் படைத்த இலக்கியங்களை இளைஞர் குழாம் தேடிப் படிக்கமுடிகிறதா? பெரும்பாலான ஊடகங்கள் எமது மூளைக்குள் அதிகார வர்க்கத்தின் சிந்தனைகளையும் கருத்துக்களையுமே மிக வேகமாகத் திணிக்கின்றன. இளைஞர் களைப் பலவிதத்திலும் அடிமைப்படுத்தும் தந்திரங்களை உபயோகிக்கின்றன. அதன் வயப்பட்டவர்கள் மனிதர்களாக வாழமுடியுமா?
மேலும் எமது நாட்டில், அடுத்தவேளை எவ்வாறு இருக்குமோ என்ற கேள்வியோடு பயணிக்கும் மனிதர்களிடம் நல்லனவற்றைத் தேடிப்படிக்கும் ஆர்வம் இருந்தாலும் இந்த நவீன தொழிநுட்ப தொடர்பாடல் வழி முறைகள் சென்றடைய தாமதமாகலாம். ஆனால், அச்சுவடிவிலான பதிப்புகள் நிலைத்து நின்று நற்பணியாற்றக்கூடியவை. நல்ல பதிப்புக்களை விரும்பிய நேரம் எல்லாம் கையில் வைத்துப் படித்துக் கொள்ளலாம். வாசகர்களும் பத்திரிகைப்பணியில் பங்காளிக்கமுடியும். இந்த வகையில் சமூக ஐக்கியத்துக்காக ஒவ்வொரு மனிதரதும் இடர்களை நீக்குவதற்காக அனைத்து மக்களிடமும் கருத்துகளைக் காவிச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவ்விதழ் வெளிவருகிறது.
காலக்கண்ணாடியாக இந்த இதழ் முழுமையாகப் பணியாற்றாவிடினும் முடிந்தவரை மக்களின் எண்ணங்களை மானுட மேன்மை நோக்கி நிலைப்படுத்த முயலும் எனநம்புகின்றோம்.

உண்ணும் உணவிலிருந்து உறையுள் வரை உள்ளீடுகளில் முறையே நச்சுத்தன்மைகளும், கலப்படங்களும், மற்றும். ஊழலும் அநீதியும் மக்களை அச்சமூட்டுகின்றன. எது சரி? எது தவறு என எதுவும் கணிக்க முடியாத ஆபத்தான உலகில் வாழ்கின்றோம். உணவு மருத்துவம் என எல்லாவற்றைப் பற்றியும் கருத்துக்கள் பலப்பலவாக சொல்லப்படுகின்றன. இப்படி எதனை எடுத்தாலும் ஆயிரம்ஆயிரமாய் கருத்துக்கள் அள்ளிவழங்கப்படுகின்றன. எண்ணில்லாக் கேள்விகள் உள்ளத்தில் எழுந்தாலும் கேட்க யாருமில்லாமல் கேட்டாலும் பதில் சரியாக கிடைக்கப்பெறாத சூழ்நிலையே தொடர்கின்றது.

அதனால் முதலில் நாம் யார்? எமது மூதாதையர்கள் எப்படி நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாகவும் சிறப்பான கலை, பண்பாடு, கலாசாரத்துடன் உலகம்பேச வாழ்ந்தார்கள். நாம் ஏன் இப்படியானோம்? என்ற சிந்தனைகளுக்குத் தெளிவு ஏற்படவேண்டும். எமது வாழ்க்கைமுறை எப்படி அமையவேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். எப்படியான சமுதாயக்கட்டமைப்பில் எங்கள் முன்னோர் வாழ்ந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

பொய்கள் அதிகமான இந்த நவீன உலகில் சமூக ஐக்கியம் சிதைந்து போய் தனித்தனித் தீவுகளாக மன இறுக்கங்களுடன் வாழ்கின்றோம். இவற்றிலிருந்து விடுபடவேண்டுமானால் எமது முன்னோர்கள் சமூக ஐக்கியம் நிறைந்த மனித மாண்போடு வாழ்ந்து சிறப்பித்த, அந்த வாழ்க்கை முறையை எண்ணிப்பார்த்து அதன் வழி செயற்பட முயலவேண்டும். சூழல்பாதுகாப்பு, இயற்கை வேளாண்மை, உடல்நலத்துக்கு உகந்த உணவு, உடை, சுகாதாரமான பாதுகாப்பான வீடுகள் என்பன போன்ற தற்சார்பு வாழ்வியலின் அம்சங்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். தேடவேண்டும்.

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி.
என்றார் திருவள்ளுவர்

விதிப்பயனால் பழி ஏற்படும் என்பது தவறு. அறிய வேண்டியவற்றை அறிந்து செயல்படாமல் இருப்பதே பெரும்பழியாகும்.

அதனால் தேடுவோம்.நல்லனவற்றை தெரிந்து கொள்வோம்.

தமிழ்மொழியின் சிறப்பு

ஒரு நாட்டைப் பற்றியோ, மொழியைப் பற்றியோ அல்லது ஒரு அரசாட்சியைப் பற்றியோ முழுமையாக அறிய வரலாறுகள் உதவுகின்றன. அவ்வரலாறு, உண்மை வரலாறாக அமைவதற்குச் சான்றுகள், அதாவது தக்கதோர் உண்மை ஆதாரங்கள் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். அப்படி உண்மையான, பொருத்தமான ஆதாரங் களின் அடிப்படையில் எழுதப்படும் வரலாற்றை (True Written History) உண்மை வரலாறு அம்பலப்படுத்தும் ஆதாரங்களை யும் பயன்படுத்தி எழுதப்படாதவற்றை (False Histroy) பொய் வரலாறு அல்லது (False strory) பொய்க் கதைகள் என்றே கூறவேண்டும்.

இப்பகுதியில் நாம் தெரிய வேண்டிய உண்மைகள் இரண்டே!. ஒன்று தமிழ் மொழிவரலாறு. இரண்டு தமிழின் வரலாறு. இவ்விரு வரலாறுகளைக் கண்டிப்பாக ஒவ்வொரு தமிழனும் அறிய வேண்டும், தெரிய வேண்டும், தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே இவ் வுண்மை வரலாற்றைப் படைக்கிறேன்.

நம் தாய் மொழியாகிய தமிழைப் பற்றியும் தமிழினத்தைப் பற்றியும் தெரிய பல உண்மை வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

1. பழங்குகைகளில் காணப்படும் கல்வெட்டுக்கள்
2. நடுகற்களில் காணப்படும் வட்ட எழுத்துக்கள்
3. செப்பேடுகளில் காணப்படும் வட்டெழுத்துக்கள்
4. இலக்கியச் சான்றுகள்
5. வெளிநாட்டவர் வருகைக் குறிப்புகள்
6. பழைய நாணயங்கள்
7. அரசு சாசனங்கள்
8. அரசர்களின் ஆவணங்கள்
9. கலைகள்-(இயல், இசை, நாடகம்)
10. கோயில் ஒழுங்குகள், கட்டிடக் கலைகள் மற்றும் சிற்பங்கள்.



குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்டபோது கடலினால் உள்வாங்கப்பட்ட தமிழர் பண்பாட்டு அம்சங்கள்

தமிழ்மொழி மிக மிகத்தொன்மை வாய்ந்த மொழி. இத்தமிழ் மொழிக்குரிய எழுத்து வடிவங்கள் எந்தக் காலத்தில் தோன்றியது என்பது ஒரு கேள்விக்குறி யாவே உள்ளது. இக்காலத்தில்தான் தோன்றியது என்று திட்டவட்டமாகக் கூற முடியாத நிலையில்தான் நம் தமிழறிஞர்கள் உள்ளனர். தற்போது நமக்குக் கிடைத் துள்ள ஆதாரங்களைக் கொண்டு செய்வோம். தொன்மை காலத்தில் அதாவது பழங்காலத்தில், நாம் இன்று கையாளும் தமிழ் எழுத்தல்லாத, வேறு நான்கு வகையான தமிழ் வரிவடி வங்களில் தமிழ்மொழியை எழுதப் பயன்படுத்தி உள்ளனர் என்பதைத் தெளிவாக உணர முடிகிறது. அவைகள் தென்பிராமி அல்லது தமிழ்ப்பிராமி, வட்டெழுத்துக்கள், கோல எழுதுக்கள், மற்றும் மலையாண்மை

என்பவைகளாம். இவற்றுள் தென்பிராமி அல்லது தமிழ்ப் பிராமி எழுத்து முறைதான் மிக மிகத்தொன்மையானது. அசோகமன்னர் தன் கல்வெட்டுக்களில் பயன்படுத்திய எழுத்து பாலி மற்றும் பிராமியே என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

முதல் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள்

திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் அனைத்தையும் நன்கு படித்து, எழுத்துக்களை வரிசைப்படுத்தி தெளிவான கருத்துக்களைக் கூறியுள்ளார்.

ஒரு காலத்தில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பரவியிருந்த மொழி தமிழ்ப் பிராமி ஒன்றே என்கிறார்.

தமிழ்ப் பிராமி எழுத்து முறைக்கும் செமிட்டிக் எழுத்துமுறைக்கும் மிக நெருங்கிய தொடர்பும், எழுத்தொற்றுமையும் மிக அதிகமாகக் காணப்படுவதால் செமிட்டிக் மொழியைக் கையாளும் பினீசியர்களுக்கும், தமிழ்ப் பிராமி முறையைக் கையாளும் திராவிடர்களுக்கும் 4000 ஆண்டுகளுக்கும் முன்பே வர்த்தகத் தொடர்புகள் உண்டு என பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

சிந்துச் சமவெளியில் இரு பெரு நகரங்களாகி மொகஞ்சதாரோ, அரப்பா போன்ற நகர நாகரிகங்களைப் படைத்தவர்கள் திராவிடர்களே! என்றும் சிந்துச் சமவெளியில் பயன்படுத்தப்பட்ட மொழியும் எழுத்தும் திராவிடர்களின் மொழியும் எழுத்தும்ஒன்றே என்று திரு. ரெ.வ. ஹீராஸ் என்னும் வரலாற்று மேதை கூறுகிறார்.

இதே கருத்தை சர்.ஜான்மார்ஸல் என்ற அறிஞரும் வலியுறுத்துகிறார். மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிக் ஆதிதிராவிடப் பழங்குடியினருக்குச்சொந்தமானது என்று, இரகசிய அறிஞர்களாகிய திரு. ஜ.எம்.போங் கார்டு லெவின் மற்றும் திரு. என்.வி. குரோ போன்றோர் கருதுகின்றனர்.

குமரிகண்டம் கடல் கொள்ளப்பட்டபோது கடலினால் உள்வாங்கப்பட்ட புராதன அரண்மனையின் பாகங்கள்

கி.மு. 3ம் நூற்றாண்டைச் சார்ந்த அசோகனின் 'கிர்னார்' கல்வெட்டில் அன்றைய தமிழகத்து அரசுகளையும் அரசியல் செய்திகளையும் அரசர்களின் பெயர்ப் பட்டியலையும் இன்றும் கூட காணலாம்.

நந்தி வர்ம பல்லவ மன்னனுடைய கல்வெட்டொன்று தமிழ் மன்னர்களை திராவிட மன்னர்கள் என்று கூறுகிறது.

தமிழக நாகரிகம் கிழக்கில் போளினோசியா, மேற்கில் மேற்காசியா, எகிப்து போன்ற நாடுகளில் எளிதில் பரவியது என்கிறார் Dr. R.R. தீட்சிதர்.

தமிழக நாகரிகம் கிழக்கில் போளினேசியா, மேற்கில் மேற்காசியா, எகிப்து போன்ற நாடுகளில் எளிதில் பரவியது என்கிறார் கால்டுவெல் தன் (Comparative grammer of Dravidian Languages)திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில்.

தமிழ்ப் பிராமி எழுத்துமுறை கிறிஸ்து பிறப்பிற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் வழக்கத்திலிருந்தது என்கிறார் திரு ஐராவதும் மகாதேவன் அவர்கள். மேலும் அவர், தமிழ்ப் பிராமியைப் பற்றிக் கூறுகையில் அரிக்கமேட்டில் கிடைத்துள்ள பானை ஓடுகளிலுள்ள தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் அதன் வளர்ச்சிக்குத் தக்க சான்றாகும் என்கிறார்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில், தமிழ்ப் பிராமியிலிருந்து, வட்டெழுத்துகளும் தமிழ்

எழுத்துக்களும் காலப்போக்கில் பிரிந்து தனித்தன்மை பெற்றதாக டாக்டர். நாகசாமி கூறுகிறார்.

ரோம் நாட்டுப் பொற்காசுகள், வெள்ளிக் காசுகளின் துணைகொண்டு, கிறிஸ்து பிறப்பிற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்மொழியும் தமிழனும், யவன நாடு, சீனதேசம், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பும், வாணிகத்தொடர்பும் வைத்திருந்தனர் என்பது தெளிவாகிறது.

சின்னமனூர் செப்பேடுகளும், வேள்விக் குடிச் சாசனமும் சங்க கால மன்னர்களின் பெயர்களை வரிசைப்படுத்திக் காட்டுவதுடன் சங்கங்களின் வரலாற்று மரபை உறுதி செய்கின்றன. அவ்வண்ணமே! தொல் காப்பியம், பட்டினப்பாலை, மருதைக் காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை, போன்ற இலக்கிய ஆதாரங்கள் தக்கதோர் புறச்சான்றுகளாக உள்ளன. மேலும் பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்கள் காலத்துக் காசுகளும் தமிழ்மொழியைக் கையாண்ட தமிழர்களின் சிறப்பைப் பறைசாற்றிய வண்ணமுள்ளது.

உண்மை வரலாறு

தமிழனின் பிறப்பிடமும், தமிழ் மொழி யின் பிறப்பிடமும் ஒன்றே. குமரிக் கண்டத்தில், கையாண்ட மொழி தமிழ்த் திராவிட மொழியே, பல்லாயிரம் ஆண்டு களுக்குப் பின் படிப்படியாக வளர்ந்த தமிழும் தமிழனும் புகழின் உச்சகட்டமெட்டினர். பழம்பாண்டி நாட்டை உலகிற்கு சுட்டிக் காட்டி சிறப்புடன் வாழ்ந்தனர். தமிழ் மொழி சீரும் சிறப்பும் பெற்றுத் தழைத் தோங்கியது. குமரிக் கண்டத்தைத் தன் தாயகமாகக்கொண்ட திராவிடத் தமிழன் உலகின் பல பகுதிகளுக்கும் பரவலானான். தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் வாணிகத்தை மேற்கொண்டான். ஆங் காங்கே குடியிருப்புகளை உருவாக்கி உலகெங்கும் நிலைத்தான். நான்கு முறை ஏற்பட்ட கடல்கோள்களால் தமிழனின் புகழும் நாடும் மொழியும் அழிவுற்றன. தென்மதுரை, நாகநன்நாடு, கபாடபுரம், காவிரிப்பூம்பட்டினம் அனைத்துமே அழிந்து நாசமாகியது.

இதிலிருந்து நாம் தெரிவது என்ன வென்றால் திராவிடக் கருவாகிய, மூல மொழியாகிய, தமிழ்மொழி குமரிக்கண்டம் முதல் இமயம் வரை பரவி வேரூன்றி யிருந்தது என்பதே! அதாவது தெற்கே குமரிக்கண்டம் என்னும் பெருநகர நாக ரித்தைப் படைத்த தமிழ்த் திராவிடன் வடக்கிலும் இருபெரும் துணை நகரங் களாக மொஞ்சதாரோ, அரப்பாவை அமைத்து வாழ்ந்தான் என்பதே இதிலிருந்து தமிழன் பெருமைகளையும் தமிழ்மொழி யின் பெரும் சிறப்பையும் நன்கு உணரலாம்.



தற்போது லெமூரியாக்கண்டம் என்று கூறப்படும் கண்டம் பண்டைய எமது குமரிக்கண்டம் ஆகும். அங்கே 49 தமிழ் நாடுகள் இருந்ததாக பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன.

உலகம் உன்னைப் பார்த்து...

உன்னைப் பார்த்து உலகம்
உரைக்கும்
தன்னம்பிக்கை தளரவிடாதே !

இரட்டைப் பேச்சு பேசும்
உலகம்
மிரட்டும் தம்பி மிரண்டுவிடாதே !

ஒவ்வொரு வாயிலும்
ஒற்றை நாக்கு
உலகின் வாயில் இரட்டை நாக்கு !

எனக்கு நேர்ந்த இழிமொழி எல்லாம்
உனக்கு சொல்கிறேன்
உள்ளத்தில் எழுது !

இன்னிசைத் தமிழை எளிமை
செய்தேன்
இலக்கியம் இல்லை
லேகியம் என்றது !

திரைப்பாட்டுக்குள் செழுந்தமிழ்
செய்தேன்
பரிமேலழகரை
வரச்சொல் என்றது !

குறுந்தொகை கம்பன் கொட்டி
முழக்கினேன்
குண்டுச் சட்டியில்
குதிரை என்றது !

எலியட், நெருடா எல்லாம் சொன்னேன்
திறமை எல்லாம்
திருடியதென்றது !
எளிய தோற்றமே இயல்பென
இருந்தேன்
வடுக பட்டி
வழியுது என்றது !

அழகாய் நானும் ஆடைகள்
கொண்டேன்
கழுதைக் கெதற்கு
கண்மை என்றது !

மேடையில் கால்மேல்
காலிட்டமர்ந்தேன்
படித்த திமிர்தான்
பணிவில்லை என்றது !

மூத்தோர் வந்ததும் முதலில் எழுந்தேன்
கவிஞன் அல்ல
காக்கா என்றது !

உயர்ந்தோர் பெருமை உவந்து
புகழ்ந்தேன்
காதில் பூ வைக்கிறான்
கவனம் என்றது !

விரல்நகத்தளவு விமர்சனம் செய்தேன்
அரிவாள் எடுக்கிறான்
ஆபத்து என்றது !

மற்றவர் சூழ்ச்சியால் மண்ணில்
விழுந்தேன்
புத்தி கொழுத்தவன்
புதைந்தான் என்றது !

மூச்சுப் பிடித்து முட்டி முழைத்தேன்
தந்திரக்காரன்
தள்ளிநில் என்றது !

பகையைக் கண்டு பைய நகர்ந்தேன்
பயந்துவிட்டான்
பாவம் என்றது !

மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்தேன்
விளங்கிவிட்டதா ?
மிருகம் என்றது !

பணத்தில் பொருளில் பற்றற்று
இருந்தேன்
வறுமையின் .....
பிறந்தவன் என்றது !

என்னை தேய்த்து மண்டபம்
கட்டினேன்
புலவன் இல்லை
பூர்ஷ்வா என்றது !

சொந்த ஊரிலே துளிநிலம் இல்லை
இவனா ?
மண்ணின் மைந்தன் என்றது !

தென்னை மரங்கள் தேடி வாங்கினேன்
பண்ணையார் ஆனான்
பாமரன் என்றது !

கயவர் கேட்டார் காசு மறுத்தேன்
கறக்க முடியா
கஞ்சன் என்றது !

உண்மை இருந்தால் உறுபொருள்
கொடுத்தேன்
உதறித்தியும்
ஊதாரி என்றது !

மங்கயரிடையே மௌனம் காத்தேன்
கவிஞன் என்ற
கர்வம் என்றது !



கவிஞர் வைரமுத்து

திசைகள்தோறும் தேதி கொடுத்தேன்
ஐயோ புகழுக்கு
அலைகிறான் என்றது !

நேரக்குறைவு நிறுத்திக்கொண்டேன்
கணக்குப் பார்க்கிறான்
கவிஞன் என்றது !

அப்படி இருந்தால் அதுவும் தப்பு .
இப்படி இருந்தால்
இதுவும் தப்பு .

கத்தும் நாய்க்கு காரணம் வேண்டாம்
தன் நிழல் பார்த்து
தானே குரைக்கும் .

உலகின் வாயைத் தைத்திடு அல்லது
இரண்டு செவிகளை
இறுக்கி மூடிடு !

உலகின் வாயைத் தைப்பது கடினம்
உந்தன் செவிகளை
மூடுதல்
சுலபம்.....

எண்ண அலைகளுக்குள் அள்ளுண்டு போவதா? மீள்வதா?



எமது எண்ணங்கள் தான் செயல் களாகின்றன. நல்லதையும் நினைக் கின்றோம். தீயதையும் நினைக்கின்றோம். நல்ல எண்ணங்கள் வலுப்பெற்றால் நாங்கள் செய்கின்ற செயல்களும் நல்லதாக அமையும். தீய எண்ணங்கள் வலிமை யானால் தவறானபாதைக்கு வழிகாட்டி விடும். எதிர்மறை எண்ணங்களை, எங்களை ஆட்சி செய்யவிட்டால் அதிலிருந்து மீள்வது மிகுந்த சிரமம். அவை தவறானவற்றை எல்லாம் சரி என்று நம்பவைக்கும். அந்த வழியில் செல்லவைக்கும். மனரீதியாக வலிமையற்று போகும் போது தவறுகள் கூட சரியாகத் தோன்றும்.

இன்று, இதுதான் எமது மண்ணில் நிகழும் பல சிக்கல்களுக்கு காரணமாக அமைந்துவிடுகின்றது. குடும்ப அமைப்பையே சீர்குலைய வைக கும் வகையில் நிகழ்வுகள் தொடர்கின்றன.

பொதுவாக நாடுகளின் ஆட்சி முறையும் அதன் அடிப்படையிலான சமூகப் பொருளாதார நிலைமை களும் அபிவிருத்தி என்ற மோகத் தால் பிரச்சினைகளை மேலும் மேலும் மோசமாக்கி விடுகின்றன.

இந்தச்சூழ்நிலையில் எமது சமூகங் களில் சில குடும்பங்களில் ஒரு வேளை உணவுக்கே வழி இல்லாத அவலம்.

இன்னுமொரு சில குடும்பங் களில் மிகையான பணத்தால் தொடரும் ஆபத்து.

குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களில் பள்ளிக்கு சென்றுபடிக்க முடியாத சிறுவர்கள். தங்கள் குடும்பத்துக்காக சிறுவயதிலேயே வேலைக்கு போகவேண்டிய சூழ்நிலை. கூலி வேலைகளுக்கு போகும் சிறுவர்கள் அவர்களது மேலாளர்களால் துன்புறுத்தப் படும் கொடுமை. இத்தகைய காரணங்கள் பாதிக்கப்படுகின்ற இளவயதினரிடையே தமக்காக யாருமில்லையே என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. எதிர்மறை யாக அவர்களை சிந்திக்க வைக்கிறது. தவறான பாதையில் செல்பவர்களுடன் சேர்ந்து பழகவைக்கிறது. இதுதான் எமக்கு விதிக்கப்பட்டது என்ற எண்ணம் புகைப்பிடித்தல், மது அருந்துதல் என்பது டன் நின்றுவிடாமல் கஞ்சா, ஹெரோ யின், கொக்கெயின் இன்னும் பல போதைப் பொருட்களுக்கும் அடிமையாகக் காரண

மாகின்றது.

இங்கே பொருளாதார வறுமை இளைய வர்களை சீரழிக்கின்றது. இன்னுமொரு பக்கத்தில் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து உறவுகள் மிகவும் கடுமையாக உழைத்து அனுப்பும் பணம் பல நலத் திட்டங்களுக்குப் பயன்படும் அதேவேளை, பல சந்தர்ப்பங்களில் தவறான வழிகளிலும் இளையோரால் பயன்படுத்தப்படுகிறது. போதைப் பொருட்களை நுகர்ந்து அவற்றுக்கு அடிமையாகும் நிலைக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. வீடுகளில் அவர்களோடு நேரம் செலவிட யாரு மில்லை. புதிய தொழில்நுட்பக்கருவி களுடன் வீட்டில்ஒவ்வொருவரும் தனித் தீவுகளாகி விடுகின்றனர். உறவுகளுடன் பேசுவதற்கு ஒருவருக்கும் நேரமில்லை.

மனம்விட்டுப்பேச எவருமில்லாத சூழ்நிலையில், எதிர்மறை எண்ணங்களே ஆட்கொள்ளும் நிலையில் இளையோர்,



வெளியேதான் தமது எண்ணங்களை பகிர ஆட்களை தேடுவார்கள். கெட்ட பழக்க வழக்கங்கள் உள்ளவர்களோடு சேருவார்கள். தம்குரலைக் கேட்க வீட்டில் ஆட்கள் இல்லாத நிலையில் வெளியே தாம்தான் பெரியவர்கள் என்பது போல் அடிதடி சண்டைகளில் ஈடுபட்டு தம்மை கதாநாயகர்கள் ஆக்குவார்கள். இவர்கள் பின்னால் இவர்களைப் போல உள்ள வர்கள் சேருவார்கள். பின்னர் மது, புகைப் பிடித்தல், கஞ்சா என போதைப்பொருட் களுக்கு அடிமையாகிவிடுவார்கள்.

பொருளாதாரவறுமையால் கல்வி கற்க முடியாதவர்களும், பொருள் அதிகம் சேர்ந்ததால் கல்வியை தொடரவிரும்பாத வர்களும் ஒரே மாதிரியான தாழ்வுச் சிக்கலுகுகுள்தான் வாழ்கிறார்கள். தமக்கு கல்வி அறிவு இல்லை என்ற இந்த தாழ்வு மனப்பான்மை- எதுவும் செய்யலாம் என்ற நோக்குடன் கெட்ட செயல்களின் உச்சத்துக்கே இவர்களை கொண்டு சென்றுவிடும். யாருக்கும் அடிமையாக இருந்து தமது வாழ்க்கையை நடத்தி விடலாம் என்ற முடிவுக்கு வந்துவிடு கிறார்கள். இது எவ்வளவு ஆபத்தானது என்பதை அவர்களுக்கு யார் புரிய வைப்பார்கள்?

உறவுகளின் இழப்புக்களின் வலிகள் சுமந்து வாழும் பெருமளவிலான பெண்கள் தளர்ந்துபோய், மூலைக்குள் முடங்கிவிடவில்லை. தமது பிள்ளை களை நன்றாக வாழவைக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கின் றார்கள். இந்தவாழ்க்கைப் போராட்டம் அவர்களை இன்னும் வலிமையடைய வைத்துள்ளது. ஆனாலும் இடையிடையே இந்த எதிர்மறை எண்ணங்கள் அவர் களையும் ஆட்டிப் படைக்கின்றன. சிறுவர்கள் மிதான பாலியல் கொடுமை

இந்தச் செய்திகள் கூட இன்று நம்மை

அதற்கான முக்கியமான காரணம் பொருளா தாரம். அதற்காக அவர்கள் தங்களை முழுமையாகவருத்தி உழைக்கத் தயாராக உள்ளார்கள். ஆனால், வேலை இலகுவாக கிடைத்துவிடாது. பல காரணங்கள் சொல்லி அவர்களை ஒதுக்கித் தள்ளப்படும் நிலையே பெருமளவில் காணப்படுகிறது. இந்த நிலையில் அவர்கள் மனம் உடைந்து போய்விடுகிறார்கள். ஆனாலும் மீள மீள எழுந்து கொள்ள முயல்கின்றார்கள். இந்த நிலைமைகள் அவர்களுக்குள் மிகுந்த மனப்போராட் டத்தை உருவாக்குகின்றன. தாய்மாரின் துன்பத்தை துடைக்க வேண்டும் என்ற நிலையில் பிள்ளைகள் படிப்பை நிறுத்தி விட்டு வேலைக்கு போகின்றார்கள்.

அங்கு அவர்கள் தமது முதலாளி களால் மிகவும் மோசமாக நடத்தப்படு கின்றார்கள் அந்த மன அழுத்தங்கள் அவர்களை தவறான பாதைக்கு செல்லத் தூண்டுகின்றன. இது துயரத்தின் ஒரு பக்கம். இப்படி பல பக்கங்களில் பலப்பல பிரச்சனைகள். சிக்கல்கள் இந்த முடிச்சுக் கள் அவிழ்க்கப்படவேண்டும். அது சாதாரண விடயமல்ல என்பது உண்மை தான். ஆனால், இப்படியே சமூகத்தின் ஒரு பகுதியினர் மனச்சிக்கல்களுக்குள் மாளும் நிலை தொடர்ந்தால் மக்களின் நிலை என்ன? இதைத்தான் செய்திகளாக நாளும் படிக்கின்றோம். இவை வெளி யுலகில் மட்டும் நடப்பவையல்ல நமது வடக்கு- கிழக்கு மாகாணத்திலும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. "வாள்வீச்சுக் குழுக்களின் அடாவடி....மாணவி மீதான கூட்டுவன்முறை.... இனந்தெரியாத சுடலம் ஆற்றில், குளத்தில் மிதப்பு..., வீட்டுக்குள் புகுந்து குடும்பத்தவர்களை கொன்று விட்டு அல்லது காயப்படுத்திவிட்டு கொள்ளை..., நான்கு வயதுச் சிறுமி கொலை..., இளைஞன் படுகொலை..." இந்தச் செயதிகள்கூட இன்று நம்மை ஒன்றும்

செய்வதில்லை. அவை வழக்கமான செய்திகளாகியதால் அதற்கு அதிர்ந்து விடாமல் பழக்கப்பட்டுவிட்டோம். ஏனெனில் அவசர உலகத்துடன் சேர்ந்து நாமும் ஓடிக்கொண்டிருக்கிறோம் நின்று நிதானிக்க நேரமில்லை. நாளை நமக்கு இந்த நிலை நேராதா?

எதிர்மறை எண்ணங்களால் ஆளப்பட்டு மனிதன் என்பவன் அவ்வாறு மனிதன் என்று அழைக்கப்படுவதற்கே அருகதை யற்றவனாக மாறிக்கொண்டிருக்கும் பொழுது கைகட்டி வேடிக்கை பார்க்க முடியுமா? ஆனால் நாம் அதைச் செய்து கொண்டிருக்கிறோம். போட்டி உலகத்துள் நாமும் ஒரு போட்டியாளராக ஓடிக் கொண்டிருக்கிறோம். ஓடி எந்த வெற்றிக் கம்பத்தைத் தொடப்போகிறோம்? மிஞ்சப் போவது "மனிதம்" அற்ற மனித உலகமே.

எனவேதான் , நாம் எமது சமூகத்தின் பால் அக்கறைகொண்டவர்களாக விழித்துக் கொள்ள வேண்டும். சமூகத்தவரின் தன்னம்பிக்கையை வளர்க்கப் பாடுபட வேண்டும். நேர்மறை (நல்ல) எண்ணங்கள் வலுவடைவதற்கான வழியைக் கண்டு பிடிக்க வேண்டும். இதுவும் சாதாரண மானதல்ல என்பதும் உண்மை. ஆனால் முயன்றே ஆகவேண்டும்.

— **தங்கா மணி**

கலையும் மனிதனும்

கலைகள் எல்லாமே உழைப்பின் போலச் செய்தல்களே. வரிசையாய் நின்று குனிந்து நிமிர்ந்தால் அது நடவு. வட்டமாய் நின்று குனிந்து நிமிர்ந்தால் அது கும்மி. நடவு - உழைப்பு, கும்மி -கலை

பாட்டன் ஏரோட்ட பாட்டி குனிந்து விதை போடுதல் விதைத்தல்.பாட்டி குனிந்து அரிசி மாவில் புள்ளிகள் வைத்தல் கோலமிடல்.விதைத்தல் -உழைப்பு. கோலமிடல் -கலை

மீண்டும் மீண்டும் உழைப்பதற்கு உடல்களை இலகுவாக்குவதற்காகவே கலைகள் தொடக்கத்தில் தோன்றி யுள்ளனவிதைப்பின் போலச் செய்தலான கோலமிடல் தமிழர்கள் கண்ட உயரிய கலை. உயிரியல் கலையும் கூட!

அடைமழைக் காலத்தில்உணவிழந்து ஏதிலிகளாய் வரும் எறும்புகளைக் காக்க,தமிழர் கண்ட கலைஅரிசி மாவில் கோலமிடுதல்.

அரிசி மாவில் கோலமிடுதல். எறும்பு களைக் காக்கும் கலை அதையே இரசாயன வண்ண மாவுகளால் கோலமிடுதல் எறும்புகளின் உயிர்களைப் போக்கும் கலை.

தமிழ் இன மரபுக் கோலக் கலையில் ரங்கோலி , ஹோலி போன்ற பிற இன மரபுக் கலைகள் நுழைகையில் என்ன நடக்கிறது?

எறும்புகளை வாழ வைக்கத்தோன்றிய கலை சாகடிக்கும் கலையாக மாற்றப் படுகிறது.வண்ண இரசாயன மாவில் கோலமிடுவதை உறுதியாய் நிறுத்துவோம்.

அரிசி,வரகு,சோளம் போன்ற மாவுகளில் கோலமிட்டுதமிழர்களின் உயிர் நேய மாண்பை நிலை நிறுத்துவோம்

- கவிஞர் அறிவுமதியின் எழுத்துக்களிலிருந்து





கவிதைக் கோலம்

அழிக்கமுடியாதது இயற்கை

இரும்புப்பிடிக்குள் நசுக்குண்டு பொடியாகிவிட
நாங்கள் சருகுகள் அல்ல.
உயிர்த்துக்கொண்டே இருப்பவர்கள்.
உறவாடிக் கெடுக்க வந்த இந்தக் கை
உருக்குலைக்கவே வந்தது என்பது
உணராது வாழ்பவர்களும்
விழித்துக் கொண்டு
விடை சொல்வார்கள்.
ஏனென்றால் எங்கள் வலிமை
அவர்களைக் காப்பாற்றும்.
அழிக்க முடியாதது இயற்கை.
ஆக்கத்துக்கு மட்டுமே ஆதரவு தரும்
இயற்கையை நம்பி வாழ்பவர்கள்,
உருக்குகளுக்குள் அகப்பட்டு
உடைந்து நொருங்கிவிட மாட்டார்கள்.
அடகு வைக்கவோ விற்கவோ முடியாத
எங்களை அழிக்க எத்தனை
இரும்புப் பூதங்கள் கிளம்பினாலும்
எதுவுமே செய்து விட முடியாது.
காயப்படுத்தலாம். ஆழிக்க முடியாது.
காயத்தை ஆற்றும் மருந்தும் நாமே.
எதனையும் வெல்ல இயற்கையால் முடியும்.
பொய்மையின் வேடம் தோற்றே போகும்.
புத்துயிர்ப்பு எமக்கு புதிதல்ல.

உண்மையின் வெளிச்சம்
பசுமையிலிருந்துதான் புறப்படும்.
ஊமைக்காயங்கள் ஒரு நொடியில்
f hz hk y ;Ngha ṭ ɲ.k ; - மணி

நட்பா? நசுக்கலா?

கூப்பிய கைகள் வரவேற்பு
தனித்துவமானவை
பலமானவை

எதிரெதிர் ஒற்றைக்கைகள்
வரவேற்பு நட்பா நசுக்கலா?

இயற்கை:
இரு கைகள் கூப்பி வரவேற்று
நான் நானாக இருந்த போது
தனித்துவமாக இருந்தேன்.
பலமாக இருத்தேன்.

என்று ஒரு கை கொடுத்து
வரவேற்கத் தொடங்கினேனோ
அன்றே நான் என்னை ....
என் தனித்துவத்தை
என் பலத்தை
இழக்கும் நிலைக்கு
ஆக்கப்பட்டேன் -அறிவழகன்

எனது மனச்சாட்சியின்படியே நான் வாக்களிப்பேன்

என் மனசாட்சிப்படியே நான் வாக்களிப்பேன். மக்களாட்சியின் சிறப்பு அம்சமே நாடு, இனம், மொழிகளைக் கடந்து குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் உரிமைகளை அப்படியே வழங்குவதுதான். அப்படி இந்த நாட்டின் குடிமக்களாகிய நமக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியமான உரிமைகளில் ஒன்றுதான் வாக்குரிமை.

நாட்டை ஆள்வதற்குரிய எல்லா அரசியல் அதிகாரங்களும் நாட்டின் குடி மக்களுக்கே உண்டு என்பது குடியரசின் தத்துவம். குடிமக்கள்தங்கள் அரசியல் அதிகாரத்தை வாக்குரிமை மூலம் செலுத்துகின்றனர்.

இந்த உரிமையைப் பயன்படுத்தித் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் சார்பில் அரசை நடத்திவர அவர்களுக்கு அதிகாரம் அளிக்கின்றனர். எனவே, மக்களாட்சி நடைபெறும் நாட்டில் வாக்குரிமை மிக இன்றியமையாத ஒன்றாகும்.

"அரசியல் ஒரு சாக்கடை" என்று சொல்லுகின்றோம். அரசியல்வாதி களையும், கட்சிகளையும் முழுந்த அளவுக்கு விமர் சிக்கின்றோம். ஆனால், விமர்சிப்பதற்கும், கருத்துக்களை முன் வைப்பதற்கும் எமக்கு உரிமை இருப்பது போல வாக்களிக்கும் உரிமையை சரிவரச் செய்யவேண்டியதும் எமது கடமை என்பதை நாம் மறக்கக்கூடாது. அதனை சரியாகச் செய்பவர்களுக்கு மட்டும்தான் தவறுசெய்யும் அரசியல் வாதிகளை விமர்சிக்க தகுதி உள்ளது.

வாக்களிப்பது நம் கடமை மட்டுமல்ல உரிமையும் கூட என்பதை முதலில் நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் தலையெழுத்தை தீர்மானிக்கும் உரிமை எங்கள் கைகளிலும்தான் என்பதை ஒவ்வொருவரும் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். எமக்கு அடிப்படை உரிமைகளை வழங்கும் மக்கள்ஆட்சித் தத்துவத்துக்கு வலுச் சேர்க்க கட்டாயம் வாக்களிக்க வேண்டும். வாக்குகளின் விழுக்காடு மக்களாட்சியின் வலிமையை எடுத்துக்காட்டும் கண்ணாடி. வாக்கு என்னும் சீட்டு நம்மை ஆள வேண்டியவருக்கு நாம் கொடுக்கும் உத்தரவு.

நாம்தேர்தலில்வாக்களிக்க விரும்பாமல் அதனை தவறவிட்டால், விரல் நுனியில் நாட்டின் தீர்ப்பை எழுத தவறியவர்கள் ஆகிவிடுவோம். இந்த உரிமையைப் பல நேரங்களில் பணம், அதிகாரம், பயமுறுத்தல் போன்ற காரணங்களுக்காக தவறாகப் பயன் படுத்துபவர்களும் உண்டு. ஆனால், அது யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வது போலத்தான். தனக்குத் தானே செய்து கொள்ளும் சதி. வாக்குக்கு பணம் வாங்குவது மனசாட்சிக்கு எதிரானது மட்டுமல்ல, சட்டப்படி குற்றமும் கூட. வறிய மக்களின் உணர்வுகளுடன் விளையாடி வாக்கு வேட்டை நடத்தும் அவலம் தொடர்கதையாகி விட்டது. வாக்களிப்பது மக்கள் உரிமை. எவரைத் தெரிவு செய்யவேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு தீர்மானிக்க அவகாசம்

இப்பொழுது உங்கள் கரங்களை உயர்த்துங்கள்
அநீதியை வீழ்த்துங்கள் நீதியையும் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும்
நிலைநாட்டுங்கள்

கொடுப்பதில்லை. தொடர் துயரங்களுடன் போராடும் அவர்கள் நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்தும் வழிகளைக் கையாளும் வேட்பாளர்கள் அவர்களின் இயலாமையை பணத்தைக்கொண்டு தமக்கான வாக்குகளாக பயன்படுத்து கிறார்கள். கொடுத்த வாக்கை வறிய மக்கள் மீறமாட்டார்கள் என்பது இந்த அரசியல்வாதிகளுக்கு தெரியும். அதனால் அவர்களின் வேலை இலகுவாகிவிடுகிறது.

இந்த ஏமாற்று வித்தைகளை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். சரியான வரைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்க வேண்டும் எனதீர் மானம் எடுக்க வேண்டும்.நாம் சரியாக வாக்களிக்கும் போது

எங்கள் சமுதாயத்துக்கு நல்லது செய்தோம் என தலைநிமிர்ந்து நிற்கலாம். ஆனால் வெறும் அற்பதேவைகளுக்காக, பொருத்தமில்லாத ஒருவரைத் தேர்ந்தெடுக்க வாக்களித்தோமேயானால் நாடடில் மக்களுக்கு எதிராக நடக்கும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் காரணமானவர்களாக நாமே இருப்போம். அடுத்த தேர்தல் வரும்வரை அந்தத் தவறை நினைத்து நினைத்து நொந்து அழமட்டுமே எம்மால் முடியும். பாதிப்பு மற்றவர்களுக்கு மடடுமல்ல எமக்கும் தான் என்பதையும் காலங்கடந்து தான் உணர்ந்துகொள்வோம். அதனால் எந்த பயனுமில்லை. யாருக்கு வாக்களித்து என்ன ஆகப்போகின்

றது. என்ற மனவிரக்தியிலும் பலர் வாக்களிக்கச் செல்வதில்லை. அதனாலும் பாதிக்கப்படப்போவது மக்கள் தான். ஏனென்றால் வாக்களிக்க செல்லாதவர்களின் வாக்குச்சீட்டுக்கள் தவறாகப் பயன்படுத்தப்பட நாங்கள் காரணமான வர்களாகிவிடுகின்றோம். கடந்துவந்த பாதை, காலம், அரசியல் வாதிகள் நடந்த, நடந்துகொள்கின்ற முறைகள், இதுநாள் வரை அவர்களால் மக்களுக்குக் கிடைத்த பயன் என்று ஒவ்வொன்றையும் ஒரு சிறுகணப்பொழுது நினைத்துப்பார்க்க முடிந்தால் யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற உறுதிப்பாட்டுக்கு ஒவ்வொருவராலும் வரமுடியும். தன்னை, தனது சுயலாபத்தை சிந்திக்காமல் எல்லாமக்களுக்கும் நல்லது நடக்க வேண்டும் என நினைக்கும் எவராலும் தவறான ஆளுக்கு வாக்களிக்க முடியாது.

யாருக்கு வாக்களித்தால் என்ன என்ற ஒவ்வொருவரின் அலட்சியப்போக்கும், தொடர்ந்து மக்களைத் துன்பத்துள் புதைக்கும் ஆபத்தான நிலைக்கே அழைத்துச் செல்லும். தாம் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றம் சென்றவர்கள் இதுநாள் வரை அவர்கள் கொடுத்த எந்த வாக்குறுதிகளை நிறை வேற்றினார்கள் என்று எத்தனைபேர் சிந்தித்துப் பார்க்கிறார்கள்?

எந்த வாக்குறுத்களும் எந்த அரசியல்வாதியாலும் ஒருபோதும் நிறைவேற்றப்படுவதில்லை. அவை வெறும் வெற்றுமுழக்கங்கள்தான். அதனை நம்பி எவராவது, வாக்களிப் பார்களேயானால், தங்கள் தலையில் தாங்களே மண்ணள்ளிப்போட்டது போலவே முடியும். வேட்பாளர்களின் செயற்பாடுகளைப் பார்க்கவேண்டும். அளிக்கப்படும் வாக்குறுதிகளுக்கு அப்பால் அவர்களைப்பார்க்கத் தெரியவேண்டும். இதற்கு நாட்டு நடப்புகளை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். செய்திகளைப் படிக்கவேண்டும். ஆனால், எல்லாச் செய்திகளும் உண்மையானவை இல்லை. என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். எது சரி, எது தவறு என்பதை ஆய்ந்து தெரிந்துகொள்ளவும் பழக வேண்டும். ஆனாலும் போலிகளை இனங்கண்டு கொள்ளலாம். அவர்கள், இடத்துக்கிடம் மாறிமாறித்தான் கருத்துக்கள் சொல்வார்கள். அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

வாக்களிப்பது ஒரு முறை. அதன்பின் குறிப்பிட்ட ஆண்டுகள் வரை, அதற்கான பயனை அனுபவிக்கவேண்டிவரும். அதனை ஒவ்வொருவரும் மனதில் ஆழமாகப் பதிந்து வைத்திருக்க வேண்டும். தன்னலநோக்கோடு சிந்திக்காமல், ஒட்டுமொத்தசமுதாயமும் நல்ல விதத்தில் பயன்பெறவேண்டும் என நினைக்கும் ஒவ்வொருவரும் தங்கள் வாக்குகளை சரியான முறையில் அளிப்பார்கள் என்று நம்புவோம்.

என்வாக்கு உயிருக்கு சமமானது. விலைமதிப்பீடுசெய்ய முடியாதது. என் வாக்கு என்னை ஆள்பவரை தேர்ந்தெடுக்கிறது. என்வாக்கு என் உரிமை, கடமை, பெருமை.

என் மனசாட்சிப்படியே நான் வாக்களிப்பேன். சாதி, மதம்,பணம், பயமுறுத்தல் என்பவற்றுக்குள் நின்று வாக்களிக்கமாட்டேன்.என ஒவ்வொரு வரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

–தங்காமணி



காத்திருக்கும் விதை

ஆசிரியர்கள், மக்கு மாணவர்களை "மாடு" என்றும் "மண்" என்றும் திட்டுவது உண்டு. பவணந்தி முனிவரோ, நன்னூலில் "மாடு போலவும் மண் போலவும் இருப்பவர்கள் சிறந்த மாணவர்கள்" என்கிறார்.

கேட்கும் தன்மையை வைத்து மாணவர்களை முதல், இடை, கடை என மூவகையாகப் பிரிக்கிறார் பவணந்தி முனிவர்.

"அன்னத்தையும் பசுவையும் போன்று இருப்பவர்கள் முதல் மாணவர். அன்னம், பாலையும் நீரையும் பிரித்துப் பாலை மட்டும் குடிக்கும். முதல் மாணவன், கேட்பதில் நல்லதையும் கேட்டதையும் பிரித்து, நல்லதை மட்டும் எடுத்துக் கொள்வான்.

பசு, புல் நிறைய இருக்கும் இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்து, பின்பு ஓரிடத்தில் அமர்ந்து, மேய்ந்த புல்லைக் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் வாயில் வருவித்து, நன்றாக மென்று தின்னும்.

முதல் மாணவன், அறிவு மிகுந்த ஆசிரியரைக் கண்டால், அவர் கூறுவதை எல்லாம் ஒன்று விடாமல் கேட்டுப் பின்பு ஓரிடத்தில் அமர்ந்து, கேட்டதைக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவில் கொண்டு வந்து சிந்திப்பான்.

மண்ணையும் கிளியையும் போன்று இருப்பவர்கள் இடை மாணவர்.

மண், உழவர் எந்த அளவுக்குப் பாடுபடுகிறார்களோ, அந்த அளவுக்கு விளைச்சல் தரும். இடை மாணவன், ஆசிரியர் எந்த அளவுக்குக் கஷ்டப்பட்டுக் கற்பிக்கிறாரோ அந்த அளவுக்கு அறிவு பெறுவான்.

கிளி, தனக்குக் கற்பிக்கப்பட்ட சொல்லையன்றி வேறு ஒன்றையும் சொல்லாது. இடை மாணவன், தனக்குக் கற்பிக்கப்பட்டதையன்றி வேறு ஒன்றையும் அறிந்து கொள்ள மாட்டான்.

ஓட்டைக்குடம், ஆடு, எருமை, பன்னாடை போன்று இருப்பவர்கள் கடை மாணவர். ஓட்டைக்குடம், ஊற்றிய நீரை ஒழுக விட்டுவிடும்.

கடை மாணவன், கற்றுக் கொடுத்ததை மறந்துவிடுவான்.

ஆடு, ஒரு செடியில் தழை நிறைந்திருந்தாலும் அங்கே நின்று வயிறு நிறைய மேயாது கண் பார்வையில் படும் செடிகளில் எல்லாம் போய் மேயும்.

கடை மாணவன், ஓர் ஆசிரியரிடம் மிகுந்த அறிவிருந்தாலும் அவரிடமிருந்து முழுவதும் கற்றுக் கொள்ளாமல், பலரிடத்திலும் போய்ப் பாடம் கேட்பான். எருமை, குளத்துநீரைக் கலக்கிக் குடிக்கும்.

கடை மாணவன், ஆசிரியரைப் படாத பாடுபடுத்திப் பாடம் கேட்பான்.

பன்னாடை, வடிகட்டும் போது தேனை விட்டுவிட்டுக் கசடுகளை வைத்துக் கொள்ளும்.

கடை மாணவன், நல்லவற்றை விட்டுவிட்டுக் கெட்டவற்றை எடுத்துக் கொள்வான்.

தாகம் கொண்டவன் எப்பிடி நீருக்குத் தவிப்பானோ, அப்பிடி அறிவுத்தாகம் கொண்டவனும் தவிக்க வேண்டும்" என்கிறார் பவணந்தி முனிவர்.

ஆனால், அறிவுத் தாகம் அறிய அறிய அதிகமாகுமே அன்றி அடங்காது.

கேட்டல் என்பது ஒரு தவம்

நம்மில் பலருக்குக் கேட்கத் தெரியாது. உண்மையை அறிய வேண்டுமென்றால் விருப்பு வெறுப் பின்றிக் கேட்கத் தெரிய வேண்டும்.

ஆனால், பெரும்பாலோர் என்ன செய்கிறார்கள்? அவர்களுக்கு விருப்ப மானதை மட்டுமே கேட்கிறார்கள்.

ஆத்திகன் ஆத்திகச் சொற்பொழிவு களையே கேட்கிறான்.

நாத்திகன் நாத்திகச் சொற்பொழிவு களையே கேட்கிறான்.

ஒரு மதம், ஒரு கட்சி, ஓர் இயக்கத தைச் சார்ந்தவர்கள்.....அந்த மதம், கட்சி, இயக்கச் சொற்பொழிவுகளை மட்டுமே கேட்கிறார்கள்.

இவர்களால் உண்மையை அறிந்து கொள்ள முடியாது. இரு கட்சிகளையும் தீர விசாரிப்பவன் தான் உண்மையை அறிய முடியும். அவன் தான் தீர்ப்புக் கூற முடியும். ஆனால் என்ன நடக்கிறது? ஒரு கட்சியை மட்டுமே விசாரித்து விட்டுத் தீர்ப்புக் கூறப்படுகிறது.

இதைவிட மோசம். வாதி..அல்லது பிரதிவாதி நீதிபதியாகி விடுகிறான். எதிர்க்கட்சியை எதிரிக்கட்சியாக நினைக் கிறான்.

உண்மை, நியாயம் தங்களிடம் மட்டுமே உள்ளதாக நினைக்கிறான். இது உள்ளத்தில் உண்டாகும் ஒரு பக்க வாதம்.

மதவாதிகள், அரசியல்வாதிகள், இயக்கத்தவர்களிடம் இந்த வியாதி இருப்பதை நாம் காணலாம். இத்தகை யவர்கள் ஆபத்தானவர்கள். இவர்கள் சமூகத்துக்குத் தீங்கு விளைவிப்ப தோடன்றித் தங்களுக்கும் தீங்கு விளை வித்துக் கொள்கிறார்கள். இத்தகையவர் களால் நாட்டின் அமைதியும் முன்னேற்ற மும் பாதிக்கப்படும்.

இன்னும் சிலர் கேட்பதைத் தவ றாகவே புரிந்து கொள்வார்கள். அவர்கள் உள்ளத்தில் ஏற்கனவே சில கருத்துக்கள் கெட்டிபட்டுக் காய்ப்பேறிக் கிடைக்கும். முன்கூட்டி ஏற்படுத்திக் கொண்ட தப்ப பிப்பிராயங்களும் இருக்கும்.

அவர்கள் கேட்கும் கருத்துக்களில், அவர்கள் ஏற்கனவே வைத்திருக்கும் கருத்துக்களின் சாயம் ஏறிவிடும்.

உண்மையை அறிய வேண்டு மென்றால், முதலில் நம்முடைய உள்ளத் தில் இருக்கும் விருப்பு-வெறுப்புக் களைத் தூக்கித் தூர எறிந்து விடவேண்டும்.

வீட்டில் நடக்கும் விசேஷங்களுக்கு வேண்டியவர்களை மட்டுமே அழைப்பது போல் பலர் தங்களுக்கு வேண்டிய கருத்துக்களை மட்டுமே வரவேற் கிறார்கள்.

இவர்கள் உண்மையை அறிய மாட்டார்கள்.

அறிவு விஷயத்தில் கேட்டல் என்பது பிச்சை வாங்குவதாக இருக்கிறது.

ஞான விஷயத்தில் குருவின் உபதேசம் என்பது மண் நீரைப் பெறுவது போன்றது. குரு விதைப்பதில்லை. விதை சீடனுக்குள் இருக்கிறது.

குரு நீர் வார்க்கிறார். சீடனுக்குள் இருக்கும் விதை- சத்தியம்- வெளிப் படுகிறது. குருவே விதைத்து நீரூற்று வதாக இருந்தால் அது அனுபவ ஞான மாக இருக்காது.

உண்மையில் ஞானம் என்பது அனுபவம் தான். கற்றுத் தெரிவதல்ல.

நம்மிடம் விதை இருக்குமா என்று சந்தேகப்பட வேண்டாம்.

நம் எல்லோரிடமும் விதை இருக்கிறது. தேவை நீர் தான்.

கவிக்கோ அப்துல் ரகுமானின்
'இது சிறகுகளின் நேரம்'
தொகுதியிலிருந்து

காடுகளை வளர்ப்பதில் பறவைகளின் பணி

மனிதன் ஒரு அழிக்கும் விலங்காக மாறிவருகையில் ஐந்தறிவு அங்கிகளான பறவைகள், விலங்குகள் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதில் எத்துணை சிறப்பாகச் செயற்பட்டுவருகின்றன என்பதை -அனுபவரீதியாக விளக்கும் ஆக்கம் இது.

உயிரினங்களானாலும்சரி, பரிணாம வளர்ச்சி அடைந்த மனிதர்களானாலும் சரி அனைத்துக்கும் பொதுவாக இருக்கும் தலையாயக் கடமை, தங்களது சந்ததியைப் பெருக்குவதுதான். இதற்குத் தாவரங்களும் விதிவிலக்கல்ல. எல்லாத் தாவரங்களுமே ஏதாவது ஒரு வகையில் தன் இனத்தைப்பெருக்கும்வேலைகளைச் செய்துவருகின்றன. காற்று, நீர், கால் நடைகள், பறவைகள் எனப் பலவற்றின் மூலம் தாவரங்கள் தங்களுடைய சந்ததியைப் பெருக்குகின்றன. இவற்றில் தாவரங்களுக்கு அதிகளவில் உதவுபவை பறவைகள்தான்.

பறவைகள் உண்ட பழங்களின் விதைகள், எச்சத்தின் மூலம் மண்ணில் விழுந்து மறு பிறப்பு எடுக்கின்றன. இப்படி மலைகளிலும் காடுகளிலும் பறவைகளால் உயிர்பெற்ற தாவரங்கள் ஏராளம். ஆல், அரசு, புளி, வேம்பு போன்றவற்றில் 80 சதவிகித மரங்கள் பறவைகளால் தான் பரவலாக்கப் பட்டிருக்கின்றன. பசிக்குப் பழம் தந்த மரங்களுக்குக் கைம் மாறு செய்யும் விதமாக அவற்றின் சந்ததிகளைப் பெருக்கிவரும் பறவைகள், அதன் மூலம் மறைமுகமாக மனிதர்களுக்கும் தொண்டாற்றுகின்றன. ஆனால், இதைப் புரிந்துகொள்ளாத நாம், பறவைகளுக்குச் சாவுமணி அடித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவைச் சேர்ந்தவரான பறவைகள் ஆராய்ச்சியாளர் டேவிட் சற்குணம். ஓய்வுபெற்ற பேராசிரியரான இவர், கன்னியாகுமரி மாவட்ட வனத துறையின் கீழ் செயல்படும் 'நன்னீர் பறவைகள் பாதுகாப்பு அமைப்பு' இலும் உறுப்பினராக இருக்கிறார். இவர், பறவைகள் மூலமான விதைப் பெருக்கம் குறித்துப் பதிரிகை ஒன்றிற்கு வழங்கிய தகவலின் பகுதி இக்கட்டுரையாகும்.

"காடுகளிலும் மரங்கள் அடர்ந்துள்ள பகுதிகளிலும் பறவைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. பொதுவாக, பிப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை பறவைகளின் இனப்பெருக்கத்துக்கு உகந்த காலமாக இருக்கிறது. இக்காலகட்டத்தில் தான் மா, பலா, வேம்பு, அத்தி, ஆல், அரசு, புளி, செர்ரி உள்ளிட்ட மரங்களில் பழங்களும் அதிகமாகப் பழுக்கின்றன. இப்பழங்கள்தான் பெரும்பான்மையான பறவைகளின் விருப்ப உணவாக இருக்கிறது.

இப்படிக் கிடைக்கும் பழங்களைச் சாப்பிட்டு, ஆங்காங்கே எச்சமாக நிலத்தில் பரப்பும் வேலையைப் பறவைகள் செய்கின்றன. காகம் வேப்பம்பழங்களை விரும்பிச் சாப்பிடும். அதனால் வேப்பம்

விதைகளை இது பரப்பும். எதிர்பாராத இடங்களில் கொய்யா மரங்கள் இருக்கும். அதற்குக் கிளிகள்தான் காரணம். அத்தி, ஆலமரங்களில் இருக்கும் பழங்களை மைனா, கிளி, குயில் ஆகியவை விரும்பிச் சாப்பிடும். தினை, கம்பு, சோளம் போன்ற சிறுதானியங்களை நெல்குருவி, புறா, சிட்டுக்குருவி ஆகியவை விரும்பிச் சாப்பிடும். இப்படி விரும்பிச் சாப்பிடப்படும் பழங்களின் விதைகள் பறவைகள் மூலமாக மண்ணில் விழுகின்றன.

இப்படி மண்ணில் விழுந்த விதைகள் ஜூன், ஜூலை மாதங்களில் மழை பெய்யத் தொடங்கியதும் முளைக்க ஆரம்பிக்கின்றன. பறவைகளின் எச்சத்தோடு விதைகள் கலந்து விழுவதால் இயற்கையாகவே விதைநேர்த்தியும் செய்யப்பட்டு விடுகிறது. அதனால் விதைகளின் முளைப்புத்திறனும் சிறப்பாக இருக்கிறது.

மனிதர்களால் நட்டு வைத்து வளர்க்க முடியாத இடங்களில்கூட கொய்யா, நாவல், கொடுக்காப்புளி, சப்போட்டா, சீத்தா ஆகிய பழமரங்களை நட்டு வைப்பவை பறவைகள்தான். இப்படிச் சிறந்த விதை பரப்பிகளாகச் செயல்படுவதோடு விவசாயத்தில் பூச்சிகளை ஒழிப்பதிலும் பெரும்பங்கு ஆற்றுகின்றன பறவைகள். ஆனால், பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டால், பறவை இனங்களும் அழிந்துவருவது மறுக்க முடியாத உண்மை. பறவைகள் மட்டுமல்ல் ஓர் உயிர்ச் சங்கிலியையே அறுத்து வருகின்றன பயிர்களில் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள்.

பூச்சிக்கொல்லிப் பயன்பாட்டால் பயிர்களில் குத்துயிரும் குலையுயிருமாக இருக்கும் பூச்சிகளைப் பறவைகளும் வெட்டுக்கிளி உள்ளிட்ட சில உயிரினங்களும் சாப்பிடுகின்றன. இதனால் பாதிப்புக் குள்ளாகும் வெட்டுக்கிளியைச் சாப்பிடும் தவளை பாதிக்கப்படுகிறது. அதைச் சாப்பிடும் பாம்பு பாதிப்புக் குள்ளாகிறது. பாம்பைப் பிடித்துச் சாப்பிடும் கழுகு, மயில் உள்ளிட்ட சில உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன. இதே போலத்தான் வெட்டுக்கிளிகளையும் பூச்சிகளையும் சாப்பிடும் பறவைகளும் பாதிப்புக் குள்ளாகி மலட்டுத்தன்மை அடைகின்றன. இப்படிப் பறவை இனங்கள் அழிவதால், பல வகையான தாவரங்களும் விதைகளைப் பெருக்கமுடியாமல் அழிந்து

மனிதனின் அழிவுவேலை

வருகின்றன. இதைக் கேட்பதற்குச் சாதாரணமாகத் தோன்றும். கூர்ந்து கவனித்தால்தான் இதன் விபரீதம் புரியும்.

பறவைகளை அழிக்கும் இன்னொரு செயல் மரங்களை அழிப்பது. பல மாவட்டத்தில் பல இலட்சம் ஏக்கர் பரப்பில் இருந்த பல்வேறு வகையான மரங்கள் அழிக்கப்பட்டு ரப்பர் மரங்கள் வளர்க்கப் பட்டு வருகின்றன. அசைந்தாடும் மரங்கள் பறவைகளுக்கு கூடுகட்ட ஏற்றவையல்ல என்பதால், ரப்பர் மரங்களில் பறவைகள் கூடு கட்டுவதில்லை. இதனால், குமரி மாவட்டத்தில் பறவைகள் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது. வசதி யான வாழிடம், உணவு, பாதுகாப்பு இந்த மூன்றும் இருக்கும் இடங்களில்தான் பறவைகள் வாழ்ந்து இனப்பெருக்கம் செய்யும். நகர விரிவாக்கம், சாலை விரிவாக்கம் என்று மரங்களை அழிப்ப தால் பறவைகளின் வாழிடமும் சேர்ந்தே அழிகின்றன. இப்படிப் பறவைகள் அழிவ தால், விதைப்பெருக்கமும் அருகி வருகிறது" என்ற டேவிட் சற்குணம் நிறைவாக, "இனியாவது நாம் சுதாரித்துக்கொண்டு பறவைகளை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

வீடுகளில் மரப்பெட்டிகள், அட்டைப் பெட்டிகளைத் தொங்கவிட்டால், அவற்றில் பறவைகள் தங்க ஏதுவாக இருக்கும். நிழற்பாங்கான இடங்களில் பறவைகள் வசதியாகத் தண்ணீர் குடிக்கும் வகையில் சிறிய பாத்திரங்களில் தண்ணீர் நிரப்பி வைக்கலாம். சிறுதானியங்களை அவற்றுக்கு உணவாக வைக்கலாம். உணவு, வாழிடம், பாதுகாப்பு ஆகிய வற்றை உறுதிபடுத்திவிட்டால், அவை தானாகவே கூடுகட்டி வாழத் தொடங்கி விடும்" என்று பறவைகளை வாழ வைக்கும் சில வழிமுறைகளையும் சொல்லி முடித்தார்.

தமிழ்நாட்டின் பேராசிரியர் டேவிட் சற்குணம்

தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-1

■ 1,2 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1.



2.



03. தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று ஏனையவற்றிலிருந்து வேறுபட்டது. வேறுபட்ட உருவின் கீழ்க்கோடிடுக.



04. A யிற்கும் B யிற்கும் பதிலாக மிகப் பொருத்தமான சொற்சோடியை தெரிவு செய்க.

1. பேனை, எழுத்து, ...A.....
2. விதை, முளை, மரம்
3. நூல், ...B..... , ஆடை

1. புத்தகம், பந்து 2. புத்தகம், துணி 3. விதை, துணி

05. வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்

கண் - காட்சி

காது - ஓசை

மூக்கு - .....

1. கடித்தல் 2. வாசனை 3. பார்த்தல்

06. நாளை மறுதினம் பாடசாலைக்கு வரும் போது சிறிய கதைகள். பாடல்கள். நகைச்சுவைத் துணுக்குகள் ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள் இக் கூற்று

1. அறிவுறுத்தல் 2. அறிவித்தல் 3. அறிவுரை

■ **7 ஆம், 8 ஆம் வினாக்களில் அடுத்து வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

7.



.....

1.
2.
3.

8.

.....

1.
2.
3.

■ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்ப 9 ஆம், 10 ஆம் வினாக்களுக்குச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

09. A - முகவரி எழுதுதல் B - தபாலகம் செல்லல்
C - கடதாசி எடுத்தல் D - கடிதம் எழுதுதல்
E - பெட்டியில் இடுதல்

1. ADCBE 2. BCDAE 3. CDABE

10. A - காலை ஆறு மணிக்கு B - புத்தகப் பையை
C - பள்ளிக்குச் சென்றான் D - எழுந்து தன்
E - தோளில் மாட்டிக் கொண்டு F- கண்ணன்
G - காலைக் கடன்களை முடித்து

1. FADGBCE 2. FADGCEB 3. FADGBEC

11. **வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**





12. அம்புக்குறிகளின் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கு மிகத் தூரம் கூடிய பாதையைக் காட்டும் உருவின் கீழ் கோடிடுக.



13. கனவுருவை அமைக்கத் தக்க உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



14. பாடசாலையின் கண்காட்சியொன்றும் 9 ஆந் திகதி ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெற்றது எனின் கண்காட்சி முடிவடைந்த திகதி

1) 11ம் திகதி 2) 12ம் திகதி 3) 13ம் திகதி

15. சமதூர இடைவெளியில் நடப்பட்ட மூன்று கம்பங்களுக்கு இடையிலான தூரம் 24 cm எனின் ஆறு கம்பங்களுக்கு இடையிலான தூரம் யாது?

1) 48 cm 2) 60 cm 3) 56 cm

16. மூன்று சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

1.
2.
3. 

17. எப்போதாவது நடைபெறக் கூடிய நிகழ்வுவைத் தெரிவு செய்க.

1. சூரியன் உதித்தல்
2. விண்மீன் தோன்றுதல்
3. சூரிய கிரகணம் தோன்றுதல்

18. கடிகாரம் என்னும் சொல்லில் இருந்து ஆகக் கூடுதலாக எத்தனை சொற்களை உருவாக்க முடியும்?

1. 4 2. 3 3. 5

19. 2016 ஆம் ஆண்டு தை மாதத்தினதும், மாசி மாதத்தினதும் நாட்களின் மொத்த எண்ணிக்கை

1. 59 நாட்கள் 2. 58 நாட்கள் 3. 60 நாட்கள்

20. விதுசன் தனது 10வது பிறந்த நாளைக் கொண்டாடும் போது அவனது தம்பியின் வயது நான்கு ஆகும். தம்பி 10வது பிறந்த நாளைக் கொண்டாடும் போது விதுசனின் வயது எத்தனை?

1. 20 2. 14 3. 16

21. 

சதுரம் ஒன்றின் நிறை 180g எனின் வட்டம் ஒன்றின் நிறை யாது?

1. 80g 2. 120g 3. 60g

■ பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 22ம், 23ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

6 □ 2 = 4 8 △ 5 = 13

22. □ இக் குறியீடு குறித்து நிற்கும் கணிதச் செய்கை

1. - 2. + 3. ×

23. 6 △ 3 □ 4 = [.....] இன் பெறுமானம் யாது?

1. 13 2. 5 3. 6

24. 

இவ்வுருவிலுள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை

1. 7 2. 8 3. 9

25. 10 தொடக்கம் 20 வரையுள்ள எண்களில் அடுத்துள்ள இரண்டு எண்களைக் கூட்டும் போது

1. ஓர் ஒற்றை எண் கிடைக்கும்
2. கூற முடியாது.
3. ஓர் இரட்டை எண் கிடைக்கும்

■பின்வரும் தொடர்பினை அவதானித்து 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.



26.  = ... இதன் விலை ?

1. ரூபாய் 50.00 2. ரூபாய் 60.00 3. ரூபாய் 100.00

27.  .....இதன்விலை?

1. ரூபாய் 200.00 2. ரூபாய் 150.00 3. ரூபாய் 210.00

28.

இவ்வுரு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றின் மூலம் தெரியும் கடிகார முகத்தைக் காட்டுகிறது. அதன்படி இக்கடிகார முகம் காட்டும் உண்மையான நேரம் யாது?

1. 4.00 மணி 2. 7.00 மணி 3. 8.00 மணி

29. எனது வீட்டுக்குத் தெற்கே அக்காவின் வீடு உள்ளது. அக்காவின் வீட்டிற்குக் கிழக்கே தம்பியின் வீடு உள்ளது.எனவே தம்பியின் வீட்டிற்கு எத்திசையில் எனது வீடு உள்ளது?

1. வடகிழக்கு 2. தென்கிழக்கு 3.வடமேற்கு

30. ஒரு மின் அலங்காரச் சக்கரத்தில் சிவப்பு, பச்சை, மஞ்சள் என மூன்று வகையான மின்குமிழ்த் தொடர்கள் ஒழுங்கில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவற்றுள் 18வது மின்குமிழின் நிறம் யாது?

1. சிவப்பு 2. பச்சை 3. மஞ்சள்

31. அவ் மின் அலங்காரத் தொடரில் 28 மின்குமிழ்கள் காணப்பட்டன ஆயின் அங்கிருந்த சிவப்புமின் குமிழ்களின் எண்ணிக்கை?

1. 9 2. 10 3. 12

32. பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் விடையின்கீழ்க் கோடிடுக.

1. ABCDE 2. DBECA 3. AEDCB

குமரன் பாடசாலையிலிருந்து தனது வீட்டிற்கு சென்ற பாதையைப் பின்வரும் உரு காட்டுகிறது.



33.குமரன் அதிகமான தடவைகள் எந்தத் திசையை நோக்கிப் பயணம் செய்தான்?

1. கிழக்குத் திசை 2. மேற்குத்திசை 3. வடக்குத்திசை

34. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1. நாம் பல்கலைக்களகம் செல்வோம்
2. நாம் பல்கலைக்கழகம் செல்வோம்
3. நாம் பழ்கலைக்கழகம் செல்வோம்

■பின்வரும் பாடலை நன்கு வாசித்து, 35 ஆம், 36 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

35. இப்பாடல் வரிகள் வலியுறுத்துவது

1. சுத்தம் 2. சோம்பல் 3. உடற்பயிற்சி

36. சூழலை சுத்தமாக வைத்திருப்பதால் கிடைக்கும் நன்மை

1. ஆரோக்கியமாக வேலைகளைச் செய்ய முடியாது.
2. நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழலாம்.
3. நல்ல அறிவு கிடைக்கின்றது.

■ **பின்வரும் கட்டத்தினை அவதானித்து 37 ஆம், 38 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

4, 5, 2, 2, A, 4, 4.5, 5, E, 5, W, N, 2, W, N, N, 4.5, A, B, A

37. இலக்கங்களும், எழுத்துக்களும் உள்ள இந்நிரையில் இலக்கம் 5 எத்தனை தடவை வந்துள்ளது?

1. 3 2. 5 3. 7

38. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது

1. இலக்கம் 2 2. எழுத்து E 3. இலக்கம் 4

39. சரியான கணிதச் செய்கையைத் தெரிவு செய்க.

1. $3 \times 3 - 3 = 9$ 2. $4 + 2 + 8 = 14$ 3. $8 - 5 \times 0 = 3$

40. ○ □ △ ▭

தரப்பட்டுள்ள வடிவங்கள் ஒவ்வொன்றும் மூன்று தடவை பயன்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட உருவின் கீழ்க் கோடிடுக.

1. 

2. 

3. 

தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-2

கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்ட சாதனம் கணினியாகும். இது ஒருமின்னணுச் சாதனமாகும் இது ஆசிரியராகப் பாடம் சொல்லித் தருகின்றது. கல்வி சம்பந்தமான விடயங்களையும், உலகளாவிய பொதுஅறிவு விடயங்களையும் அறிய உதவுகின்றது. இதற்குப் பேராசை கிடையாது. தனது பணிகளை நிறைவாகச் செய்யும். இது ஏளனமாகச் சிரிக்காது துரிதமாகவும் மெதுவாகவும் கற்க உதவுகிறது.

01) கணினியின் பயன்கள் 2 எழுதுக?

1).....

2).....

02. கணினி எவ்வகைச் சாதனமாகும்?

1).....

03. உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

1).....

04. "அறிவு" இச் சொல்லில் வந்துள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

1).....

2).....

05. பின்வரும் சொற்களின் ஒத்தசொல்லை எழுதுக.

1) பூரணம்.....

2) குரு.....

06. பிரித்து எழுதுக.

1) சொல்லித்தருகின்றது.....

2) மின்னணு.....

07. பின்வரும் சொற்களில் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1) பதட்டம் 2) பதற்றம் 3) பதட்றம் 4) பறட்டம்

5) ஆராயிச்சி 6) ஆராய்ச்சி 7) ஆராச்சி 8) ஆறாட்சி

08. கீழே தரப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

1) நான் எப்பொழுதும் புத்தகங்களை .....
(வாசித்தேன், வாசிப்பேன்)

2) கிளி பழங்களையும் தானியங்களையும் விரும்பி .....
(உண்ணும், உண்ணுகின்றது)

09. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

1) கூழுக்கும் ஆசை.....

2) நிழலின் அருமை.....

10. தரப்பட்ட சொற்களை கீழ்வரும் அட்டவணையில் உரிய இடத்தில் எழுதுக.
(ஓடுகிறான், மாணவன், நீ, பெரிய, நான், அவர்கள், அரசி)

பெண்பால்	வினைச்சொல்	அடைமொழி	முன்னிலை

11. கீழே தரப்பட்டுள்ள பாடலில் உள்ள வெற்றிடத்தை பூரணப்படுத்துக.

நூலகம் என்பது தேன் கூடு
நூல் ஒவ்வொன்றும் தேன் துளிகள்
.....
நூறாயிரமாம் நன்மலர்கள்

12. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.

1) வேண்டும் / பந்தியாக / ஒவ்வொரு / வாசிக்க / நாங்கள்
.....
2) அவனுடைய / பதில் / கேள்விக்குப் / சொல்லவில்லை / பெரியவர்
.....

13. பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயரை எழுதுக.

1) அணில் :- .....
2) தவளை :- .....

14. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது
.....

15. பின்வரும் சுருக்கக் குறியீடு உணர்த்தும் கருத்தை எழுதுக.

1) இ.மி.ச : ....

16. பின்வரும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
எழுவாய் பயனிலையைக் கருத்திற் கொண்டு ஆறு சொற்களுக்குக் குறையாது எழுத்துப் பிழைகளின்றி எழுதுதல் வேண்டும்.

"நான் பூங்காவிற்குச் சென்ற போது .....

1) .....
2) .....
3) .....

17. பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

1) வெளவால் : .....
2) கட்டில் : .....

18. பின்வரும் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) (DH) தும்ரிய ஸ்தானய .....

2) கீயத? .....

19. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் மாற்றி எழுதுக.

1) அவதானமாக இருங்கள் .....

20. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1) Can I help you ? .....

2) I am sorry .....

21. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

1) Do ..... (we, you) like apple?

2) please bring ..... (is, me) a pen

22. கீழ்வரும் எண்சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை சரியாக இலக்கத்தில் எழுதுக.



.....

23. இலக்கத்தில் தரப்பட்ட எண்ணை சொற்களில் எழுதுக.

3249

.....

24. .....



சாடியில் உள்ள பூக்களின் எண்ணிக்கைக்கு முன்னாலும் பின்னாலும் வரும் எண்களை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

....

25. ஒரு குவியலில் 7315 தேங்காய்கள் இருந்தன. அதனுள் மேலும் 579 தேங்காய்களை கண்ணன் சேர்த்துவிட்டான். தற்போது குவியலில் உள்ள மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

26. தமயந்தி 2935 மாபிள்களை ஒரு பேணியில் வைத்திருந்தாள் அவற்றில் 547 மாபிள்களைத் தனது தம்பியிடம் வழங்கினாள். தற்போது தமயந்தியிடம் உள்ள மாபிள்கள் எத்தனை?

.....

27. கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக

183	465	374	527

1) கூட்டுத்தொகை 557 ஆகப் பெறக்கூடிய இரு எண்களையும் எழுதுக.
(.....) (.....)

2) தரப்பட்டுள்ள எண்களில் ஓர் எண்ணில் இருந்து இன்னொரு எண்ணைக் கழிக்கும் போது வரும் விடை 344 ஆகும். அவ்விரு எண்களும் எவை?
(.....) (.....)

28. 

அ)

ஆ)

அருகே தரப்பட்டுள்ள இரு வடிவங்களிலும் உள்ள சமச்சீர் அச்சுக்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

29.

மேலே தரப்பட்டுள்ள உருவில் நிறந் தீட்டப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணில் எழுதுக.
.....

30. ஒரு பிள்ளைக்கு 5 புத்தகங்கள் வீதம் கிடைக்கக் கூடியதாக 143 புத்தகங்கள் பங்கிடப்பட்டன.அப் புத்தகங்களை எத்தனை பிள்ளைகளுக்கு கொடுக்கலாம்.

1) .....

2) மீதி எத்தனை புத்தகங்கள் .....

31. 250cm நீளமான துணியில் இருந்து எத்தனை 1/2 m துணித் துண்டுகளை வெட்டி எடுக்கலாம்? .....

32.



1) இவ்வுருவின் உள்ளே உள்ள செங்கோணங்கள் எத்தனை? .....

2) இவ்வுருவின் சுற்றளவு யாது?

.....

33. ஒரு தொட்டியில் *7 l 500 ml* நீர் இருந்தது. அதனுள் விகாஸ் *2 l 250ml* நீரை ஊற்றி பின் *4 l 325 ml* நீரை வெளியே எடுத்தான். தற்போது தொட்டியில் உள்ள நீரின் அளவு யாது?

.....l .....ml (2 புள்ளி)

34. தரப்பட்ட வரைபைப் பயன்படுத்தி 2 வசனம் எழுதுக.



1).....

2).....

35. விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

பொருட்கள்	அளவு	ரூபா	சதம்
தேங்காய் எண்ணெய்	1/	150	00
சீனி	1kg	100	00
தீப்பெட்டி	9	40	50
சன்லைட்	3 கட்டி	135	00
அரிசி	1/4 kg	30	00
பருப்பு	250g	25	00

1) விந்தன் விலைப்பட்டியலுக்கு அமைவாக பின்வரும் பொருட்களை வாங்கி இருந்தால் அவற்றுக்கு கொடுக்க வேண்டிய மொத்தப் பணம்

1/2 லீற்றர் தேங்காய் எண்ணெய் = ...

1 டசின் தீப்பெட்டி = ...

3/4 கிலோகிராம் பருப்பு = ...

மொத்தப்பணம் = ...

2) 1/2 கிலோகிராம் சீனி = ...

4 சன்லைட் = ...

750g அரிசி = ...

மொத்தப்பணம் = ...

■ 36 தொடக்கம் 65 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

36. சித்திரை மாதம் பூக்கும் தாவரம் எது

1) தேக்கு 2) இலுப்பை 3) இறப்பர் 4) முள்முருக்கு

37. அசுத்த நீரினால் ஏற்படும் நோய்

1) நீரிழிவு 2) யானைக்கால் 3) நெருப்புக்காய்ச்சல் 4) டெங்கு

38. பூக்களுக்கு தீங்கு விளைவிப்பது

1) பச்சிலைப்பூச்சி 2) தேனீ 3) வண்ணத்துப்பூச்சி 4) காகம்

39. கூர்மையான கேட்டல் திறன் கொண்ட பிராணி

1) பசு 2) நாய் 3) யானை 4) குரங்கு

40. நீர் வெறுப்பு நோயை உண்டாக்கும் பிராணி

1) பூனை 2) தேள் 3) மாடு 4) அட்டை

41. பலகையில் துளையிடப் பயன்படும் உபகரணம்

1) 2) 3) 4)

42.



இவ் உருவில் உள்ள உபகரணத்தின் பெயர்

1) தொலைநோக்கி

2) ஊசித்துளைக்கமரா

3) இரவு வானில் சந்திரனை அவதானிக்கும் கருவி

4) கைவில்லை

43. 

இவ்வுருவிலுள்ள சாடி

1) வலைச்சாடி 2) தென்னம் பொச்சினால் ஆக்கிய சாடி
3) பழைய டயரை வெட்டி ஆக்கிய சாடி
4) மூங்கில் கொட்டுச் சாடி

44. கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்கள் அடங்கும் மாகாணம்

1) சப்ரகமுவ 2) மத்திய மாகாணம் 3) வடமாகாணம் 4) கிழக்கு மாகாணம்

45. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் நான்காவது படிநிலை

1) உதிப்பு 2) பிரார்த்தனை 3) உடலைத் தளர்த்துதல் 4) மலர்வு

46. தகரங்களை வெட்டப் பயன்படும் உபகரணம்


1)


2)

3)

4)

47. "நண்டு நறுக்கி பொன்னி
ஆணமும் காச்சி
நாலாழி நெல்லுக்குத்திச்
சோறு மாக்கி....."

என்னும் பாடல்

1) தொழிற்பாடல் 2) தோணிப்பாடல் 3) அரிவு வெட்டுப் பாடல் 4) தாலாட்டுப் பாடல்

48. தேசிய இலட்சினையில் நெற்கதிர், மலரிதழ், சூரியன், சந்திரன் என்பன முறையே குறிப்பது

1) உலக நிலைப்பாடு, தன்னிறைவு, தூய்மை
2) தன்னிறைவு, தூய்மை, உலக நிலைப்பாடு
3) தார்மீகம், தூய்மை, தன்னிறைவு
4) தன்னிறைவு, தார்மீகம், தூய்மை

49.

இவ் உபகரணத்தின் பெயர்

1) ஒற்றைச்சில்லு வண்டி 2) பாக்குவெட்டி
3) இடுக்கி (சாவணம்) 4) போத்தல் மூடி திறப்பான்

50.



தரப்பட்ட உருவிலுள்ள உபகரணத்திற்குரிய விளையாட்டு குறிப்பது

1) இரட்டைக்காலில் நடத்தல் 2) கயிற்றில் நடத்தல்
3) எட்டுக் கோடு 4) பொய்க்காலில் நடத்தல்

51. பச்சை நிறத்தைப் பெற சேர்க்க வேண்டிய நிறங்கள்

1) மஞ்சள், கபிலம் 2) சிவப்பு, நீலம் 3) நீலம், மஞ்சள் 4) மஞ்சள், சிவப்பு

52. அடிப்படைத் தையல் வகையில் அடங்காதது

1) சங்கிலித் தையல் 2) பெருநூலோடி 3) சோம் தையல் 4) விஸ்பம்

53. நீரைச் சுத்தமாக்கப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம்

1) சவர்க்காரம் 2) குளோரின் 3) சோடியம் 4) தேங்காயெண்ணெய்

54. கிராமிய விளையாட்டில் அடங்காதது

1) கபடி 2) வலைப்பந்து 3) வார் ஓட்டம் 4) சடுகுடு

55.

உருவிலுள்ள விளையாட்டுக் குறிப்பது

1) சதுரங்கம் 2) பல்லாங்குழி 3) தாயம் 4) பசுவும் புலியும்

56. இலங்கையிலுள்ள இயற்கைத் துறைமுகம்

1) காலி 2) திருகோணமலை 3) கொழும்பு 4) அம்பாந்தோட்டை

57. மின்குமிழின் உள்ளே காணப்படும் இழை

1) தங்குதன் இழை 2) செப்புக்கம்பிச் சுருள் இழை

3) அலுமினியச் சுருள் இழை 4) இரும்புக்கம்பிச் சுருள் இழை

58. அயடீன் குறைபாட்டல் ஏற்படும் நோய்

1) எஸ்கேவி 2) மலேரியா 3) டெங்கு 4) கண்டமாலை

59. உணவு வகைகளைப் பாதுகாக்கும் முறைகளில் மணலில் புதைத்துப் பாதுகாக்கப்படுவது

1) மரவள்ளி 2) எலுமிச்சை 3) பாகல் 4) பனங்கிழங்கு

60. மீன் பிடித்தொழிலுக்குப் பயன்படாத உபகரணம்

1) கரப்பு 2) அத்தாங்கு 3) வனை சில்லு 4) தூண்டில்

61. ஒற்றுமையான விளையாட்டின் இறுதியில் எதிர்பார்க்கப்படாதது

1) வெற்றி பெறும் குழுவிற்காக மற்றவரின் அர்ப்பணிப்பு

2) குழுவின் வெற்றிகரமான தலைமைத்துவம்

3) குழுவாகப் பெறும் வெற்றி அக்குழுவிலுள்ள அனைவருக்கும் சொந்தமாகும்.

4) குழுவாகப் பெறும் தோல்வி அக் குழுத்தலைவனுக்குச் சொந்தமாகும்.

62. கட்புலன் மூலம் மட்டும் தகவல் பெறும் சாதனங்கள்

1) செய்திப் பத்திரிகை, சுவரொட்டி 2) சுவரொட்டி, கணினி

3) ஒலிபெருக்கி, வானொலி 4) இணையம், தொலைபேசி

63. கீழ் உள்ள உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வருணன் ஒரு வெற்றுக் கண்ணாடிக் குவளையின்அடியில் ஒரு பஞ்சுத் துண்டினை ஒட்டிய பின் அக்குவளையைக் கவிழ்த்து முற்றாக நீருள்ள பாத்திரத்தினுள் அமிழ்த்தினான். சிறிது நேரத்தின் பின்னர் கண்ணாடிக் குவளையை மீண்டும் அவ்வாறே மேலே எடுத்தான்.



குவளையின் உள்ளே அடியில் ஒட்டப்பட்டிருந்த பஞ்சுத் துண்டிற்கு நிகழ்ந்திருக்கக் கூடியது.

1) சிறிதளவு நனைந்திருக்கும் 2) முழுமையாக நனைந்திருக்கும்

3) கழன்று போயிருக்கும் 4) நனையாமல் முன்பு போலவே இருக்கும்

64. இரு உலர் மின்கலங்களும், ஒரு மின்குமிழையும், மூன்று கடத்திகளையும் மாத்திரம் பயன்படுத்தி மின்குமிழை ஒளிரச் செய்யும் முறைகளில் மிகச் சரியான முறையைக் காட்டும் உரு.



1) 2) 3) 4)

65. கீழ் உள்ள உருவில் காட்டப்படுகின்றவாறு ஒளிரும் மெழுகுவர்த்திகள் நான்கினை வேறுபட்ட உயரங்கள் கொண்ட நான்கு கண்ணாடிப் பாத்திரங்களினால் ஒரே தடவையில் மூடும் போது முதலில் அணையும் மெழுகுவர்த்தி



1) 2) 3) 4)

மாணவர்களே, இந்த "மாதிரி வினாத்தாள்" இற்கான விடைகள் அடுத்த "பொய்யாமொழி" இதழில் பிரசுரிக்கப்படும். முதலில் இத்தாளிற்கு நீங்களாகவே விடையளிக்க முயற்சியுங்கள்.

தொழிலாளர்களுக்கு...!

ஒரு ஊரில் வியாபாரி ஒருவன் வாழ்ந்து வந்தான். தனது ஊரிலிருந்து தினமும் சரக்கு மூட்டைகளை கொண்டு சென்று பக்கத்து ஊர் சந்தையில் விற்பது அவனது தொழில். இதற்காக மாட்டு வண்டி ஒன்றை அவன் வைத்து இருந்தான். ஒரு நாள் அவன் வண்டியில் பூட்டும் மாடு அவனிடம் வந்து, "எஜமான்! இரண்டு ஆண்டுகளாக நான் உங்களிடம் வேலை செய்கிறேன். ஆனால் நான் செய்யும் வேலைக்கு நீங்கள் எனக்கு சாப்பிடக் கொடுக்கும் புற்களின் அளவோ மிகக்குறைவு. தயவு செய்து எனக்கு நீங்கள் கொடுக்கும் புல்லின் அளவை அதிகரியுங்கள்" என்றது.

மாடு சொன்னதை கவனமாக கேட்ட வியாபாரி, "மாடே! நீ கடினமாக உழைப்பது உண்மையே. ஆனால் பக்கத்துக்கு வீட்டுக்காரன் மாடு 25 மூட்டைகளை தன் வண்டியில் சுமக்கிறது. ஆனால் நீயோ தினமும் 20 மூட்டைகளை மட்டுமே சுமக்கிறாய். "நீ அதிக மூட்டைகளை சுமந்தால் உனக்கு புல்லின் அளவை அதிகரிப்பதை பற்றி யோசிக்கிறேன்" என்றான். பக்கத்து வீட்டு மாடு பஞ்சு மூட்டைகளை மட்டுமே சுமக்கிறது என்பதை அறியாமல் இந்த மாடும் அதிக மூட்டைகளை சுமக்க ஒப்புக் கொண்டது.

இப்படியே ஓராண்டு சென்றது. மாடு மீண்டும் சென்று வியாபாரியிடம் புல்லின் அளவை அதிகரிக்க கேட்டது. அதற்கு வியாபாரி, "மாடே! அதிக பாரம் ஏற்றியதால் நம்முடைய பழைய வண்டி பாதிப்படைந்து விட்டது. எனவே நான் இப்போது புதுவண்டி செய்ய சொல்லியுள்ளேன். அதற்கு ஆகும் செலவை வேறு நான் பார்க்க வேண்டும். இன்னும் சற்று நாள்பொறுத்துக்கொள். நான் புல்லின் அளவை நிச்சயம் அதிகரிக்கிறேன்" என்றான். வேறு வழியின்றி மாடும் ஒத்து கொண்டது.



புது வண்டி வந்த ஆறு மாதங் களுக்குப்பின் மாடு மீண்டும் வியா பாரியிடம் சென்று வழக்கமான கோரிக்கையை வைத்தது. இப்போது வியாபாரி, "மாடே! இப்போதெல்லாம் உன்னுடைய வேகம் மிகக் குறைந்து விட்டது. பக்கத்துக்கு ஊருக்கு செல்வதற்கு முன்பைவிட அதிக நேரம் எடுத்துக் கொள்கிறாய். இதனால் நான் வியாபாரம் செய்யக் கூடிய நேரம் குறைந்துவிட்டது. எனவே உனக்கு அதிக புல் தருவது இப்போதைக்கு சாத்தியமில்லை" என்றான். கோபமடைந்த மாடு, "எஜமான்! இந்த புது வண்டியின் பாரம் பழைய வண்டியை விட மிக அதிகம். இந்த கனத்தையும் சேர்த்து இழுக்க வேண்டியதாலேயே என்னால் முன்பு போல விரைவாக செல்ல முடியவில்லை" என்றது. அதற்கு வியா பாரி, "மாடே! நீ என்ன காரணம் சொன் னாலும் உன்னால் எனக்கு அதிக இலா பத்தை பெற்றுத்தர முடியவில்லை. நான் உன் மேல் ஏற்றும் மூட்டைகளின் எண்ணிக்கையை வேண்டுமானால் குறைத்து விடுகிறேன். ஆனால் நீ அதிக புல் கேட்காதே" என்றான். தன் இத்தனை ஆண்டு உழைப்பும் வீணாகி விடும் என்று பயந்த மாடு, "வேண்டாம் எஜமான். நான் எப்படியாவது வேகமாக சென்று உங்களுக்கு அதிக இலாபம் பெற்றுத் தந்து விடுகிறேன்" என்று கூறியது.

மறுநாள் முதல் மாடு தன் சக்தி யெல்லாம் திரட்டி வேகமாக ஓட ஆரம்பித்தது. மீண்டும் முன்பு எடுத்து கொண்ட அதே நேரத்திலேயே பக்கத்துக்கு ஊருக்கு சென்று வியாபாரியை சேர்க்க தொடங்கியது. ஆனால் மிக கடின உழைப்பால் ஒரே மாதத்திலேயே நோயுற்று படுத்த படுக்கை யானது. வழக்கமாக சாப்பிடும் புல்லை கூட அதனால் சாப்பிட முடியவில்லை.

சில நாட்கள் கழித்து வியாபாரி, "மாடே! உன்னை நல்ல விலைக்கு ஒருவர் கேட்கிறார். அவரிடம் உன்னை விற்று விடப் போகிறேன்" என்றான். "எஜமான்! நான் இப்போது இருக்கும் நிலைமையில் என்னால் எந்த வேலையும் செய்ய முடி யாது. என்னை ஏன் அவர்கள் விலைக்கு கேட்கிறார்கள்?" என்றது.

வியாபாரி அதற்கு "அவர்கள் உன்னை வேலை செய்ய சொல்ல வாங்கவில்லை. உன்னை கொன்று உன் தோலை எடுக்கவே உன்னை விலைக்கு கேட்கி றார்கள்" என்றான். வியாபாரி சொன்ன பதிலை கேட்டதும் மாட்டிற்கு கண்களில் நீர் வர தொடங்கியது. "எஜமான்! நீங்கள் செய்வது அநியாயம். உங்கள் பேச்சை நம்பி மாடாய் உழைத்தாலேயே நான் நோயுற்றேன். இல்லாவிடில் நான் நீண்ட காலம் ஆரோக்கியமாக இருந்திருப்பேன். நீங்கள் செய்தது துரோகம்" என்றது. அதை கேட்ட வியாபாரி, "நான் செய்தது துரோகம் இல்லை. ஒரு எஜமானனின் லட்சியம் தன் தொழிலாளியிடம் முடிந்த அளவு அதிக வேலை வாங்கி இலாபம் பெறுவது. நான் அதையே செய்தேன். உன்னால் ஐந்து ஆண்டுகளில் சம்பா திக்க வேண்டிய பணத்தையும் மூன்றே ஆண்டுகளில் சம்பாதித்துவிட்டேன். இப்போது உன்னை விற்பதன் மூலமும் பணம்சம்பாதிக்கப் போகிறேன். என்னுடைய அதிக இலாபம் பெரும் நோக்கம் நிறை வேற உன்னுடைய ஆசையை மூலதன மாக்கிக்கொண்டேன். நீ முதல் முறை யிலேயே சுதாகரித்துக்கொண்டிருந்தால் தப்பித்து விட்டு இருக்கலாம்" என்றான்.

முதலாளிகளுக்கு இலாபம் மட்டும்தான் நோக்கம், தொழிலாளிகள்தான் விழிப்போடு இருக்கவேண்டும்.

THE TALE OF PETER RABBIT

By BEATRIX POTTER

ONCE upon a time there were four little Rabbits, and their names were—

Flopsy,
Mopsy,
Cotton-tail,
and Peter.

They lived with their Mother in a sand-bank, underneath the root of a very big fir-tree.



'NOW my dears,' said old Mrs. Rabbit one morning, 'you may go into the fields or down the lane, but don't go into Mr. McGregor's garden: your Father had an accident there; he was put in a pie by Mrs. McGregor.'

'NOW run along, and don't get into mischief. I am going out.'

THEN old Mrs. Rabbit took a basket and her umbrella, and went through the wood to the baker's. She bought a loaf of brown bread and five currant buns.

FLOPSY, Mopsy, and Cottontail, who were good little bunnies, went down the lane to gather blackberries:

BUT Peter, who was very naughty, ran straight away to Mr. McGregor's garden, and squeezed under the gate!

FIRST he ate some lettuces and some French beans; and then he ate some radishes;



AND then, feeling rather sick, he went to look for some parsley.



BUT round the end of a cucumber frame, whom should he meet but Mr. McGregor!

MR. McGregor was on his hands and knees planting out young cabbages, but he jumped up and ran after Peter, waving a rake and calling out, 'Stop thief!'



PETER was most dreadfully frightened; he rushed all over the garden, for he had forgotten the way back to the gate.

He lost one of his shoes among the cabbages, and the other shoe amongst the potatoes.

AFTER losing them, he ran on four legs and went faster, so that I think he might have got away altogether if he had not unfortunately run into a gooseberry net, and got caught by the large buttons on his jacket. It was a blue jacket with brass buttons, quite new.



PETER gave himself up for lost, and shed big tears; but his sobs were overheard by some friendly sparrows, who flew to him in great excitement, and implored him to exert himself.



MR. McGregor came up with a sieve, which he intended to pop upon the top of Peter; but Peter wriggled out just in time, leaving his jacket behind him.

AND rushed into the tool-shed, and jumped into a can. It would have been a beautiful thing to hide in, if it had not had so much water in it.



MR. McGregor was quite sure that Peter was somewhere in the tool-shed, perhaps hidden underneath a flower-pot. He began to turn them over carefully, looking under each.

Presently Peter sneezed–'Kertyschoo!' Mr. McGregor was after him in no time.

AND tried to put his foot upon Peter, who jumped out of a window, upsetting three plants. The window was too small for Mr. McGregor, and he was tired of running after Peter. He went back to his work.



PETER sat down to rest; he was out of breath and trembling with fright, and he had not the least idea which way to go. Also he was very damp with sitting in that can.

After a time he began to wander about, going lippity--lippity--not very fast, and looking all round.



HE found a door in a wall; but it was locked, and there was no room for a fat little rabbit to squeeze underneath.

An old mouse was running in and out over the stone doorstep, carrying peas and beans to her family in the wood. Peter asked her the way to the gate, but she had such a large pea in her mouth that she could not answer. She only shook her head at him. Peter began to cry



THEN he tried to find his way straight across the garden, but he became more and more puzzled. Presently, he came to a pond where Mr. McGregor filled his water-cans.
A white cat was staring at some gold-fish, she sat very, very still, but now and then the tip of her tail twitched as if it were alive. Peter thought it best to go away without speaking to her; he had heard about cats from his cousin, little Benjamin Bunny..

HE went back towards the tool-shed, but suddenly, quite close to him, he heard the noise of a hoe--scr-r-ritch, scratch, scratch, scritch. Peter scuttered underneath the bushes. But presently, as nothing happened, he came out, and climbed upon a wheelbarrow and peeped over. The first thing he saw was Mr. McGregor hoeing onions. His back was turned towards Peter, and beyond him was the gate!



PETER got down very quietly off the wheelbarrow; and started running as fast as he could go, along a straight walk behind some black-currant bushes.

Mr. McGregor caught sight of him at the corner, but Peter did not care. He slipped underneath the gate, and was safe at last in the wood outside the garden.



MR. McGregor hung up the little jacket and the shoes for a scare-crow to frighten the blackbirds.



PETER never stopped running or looked behind him till he got home to the big fir-tree.

He was so tired that he flopped down upon the nice soft sand on the floor of the rabbit-hole and shut his eyes. His mother was busy cooking; she wondered what he had done with his clothes. It was the second little jacket and pair of shoes that Peter had lost in a fortnight!

I AM sorry to say that Peter was not very well during the evening.

His mother put him to bed, and made some camomile tea; and she gave a dose of it to Peter!

'One table-spoonful to be taken at bed-time.

BUT Flopsy, Mopsy, and Cotton-tail had bread and milk and blackberries for supper.



THE END

-thank for internet

word search

B H P D A L B U S J L D G U L

K L E W O Z K R K R E N O C P

N S A O Q I G O L E T U A U M

K V H C T B P Q V T Z J T W W

P C K C K R X Z Q S O Y Q S O

S Q H F A B A S Y U C T N X C

C E M O H R O I H D L D O A G

N K E Q L Z P A N H A A B G C

P O H L F P T Q R Y S G C X I

Q K S W T O H S E D S O I L Q

P G Y L P T G T E W R D L L F

C H A I R L E M A S O N R W Q

R E H C A E T K X C O M Q W V

X W A F Q N Z T R M M X V J Z

Y H J B U U C L Z D K S W A M

BLACK BOARD
BUS
CAR
CAT
CHAIR
CLASSROOM
COW
DESK
DUSTER
GOAT
HOME
KETTLE
KITCHEN
POT
SCHOOL
TEACHER
TRAIN

கவிதை வரைவோம்...

அன்பான வாசகர்களே! உங்கள் கவிதைகளால் அடுத்த இதழில் "கவிதை வரைவோம் " பக்கத்தை சிறப்பிக்க- கீழேகாணும் காட்சி, உங்கள் உள்ளங்களில் உருவாக்கும் கவி வரிகளை இந்தப்பக்கத்தின் முடிவில் காணப்படும் வெற்றுக்கூட்டில் இப்பொழுதே எழுதிப்பாருங்கள். அதை இங்கு தரப்படுகிற மின்மடல் முகவரிக்கு மறக்காமல் அனுப்பிவையுங்கள்.

உங்கள் கவிதைகளை அனுப்புவதற்கான மின்மடல் முகவரி :

poiyaamozhi2018@gmail.com

குறுக்கெழுத்துப் புதிர்



மேலிருந்து கீழ்

1. புகழ்பெற்ற கால்வாய் (3 கட்டங்கள்)
2. ஹெர்ட் -இதை தமிழில் இப்படியும் சொல்லலாம் (3 கட்டங்கள்)
3. கிரிக்கெட் நடுவர் (5 கட்டங்கள்)
4. ரதியான மந்தி வா என அழைக்கும் மோசடிக்காரன் (6)
6. உள்ளம் கோபத்தில் இருந்தால் உதடுகளில் தெரிவது (6)
7. நீர் குடிக்க உதவும் பாத்திரம். ஓர் உலோகமும்கூட. (3)
8. இதுவும் ஒரு காலம். இதில் குயில் கூவும் (5)
9. பெண் என்பதன் ஒத்தசொல் (3)
10. குதிரை என்பதன் ஒத்தசொல் (3)

இடமிருந்து வலம்

1. பெரியார் வலியுறுத்திய அறிவு (6 கட்டங்கள்)
5. மேன்மை. உள்ளே தமிழ் மாதம் ஒன்று ஒளிந்திருக்கும் (5 கட்டங்கள்)
8. கப்பலோட்டிய தமிழன் (9 கட்டங்கள்)
4. யானைக்கு எப்போதாவது பிடிப்பது (3கட்டங்கள்)
9. அறிவு உள்ள நல்லவர்களிடம் நாம் வைப்பது (4 கட்டங்கள்)
11. இசைக்கருவி. குற்றம் இல்லாமல் வாசிக்க வேண்டும்(3 கட்டங்கள்)
12. இவை எங்கள் ஜாதி என்றான் பாரதி (3,3 கட்டங்கள்)

அமைத்தவர்
மா.கண்ணன்

அன்பான வாசகர்களே!
நீங்களும் பரிசை வெல்லும்
அதிர்ஷ்டசாலி ஆகலாம்.
குறுக்கெழுத்துப் புதிருக்கான
உங்கள் விடையை அனுப்பவேண்டிய
மின்மடல் முகவரி கீழே தரப்படுகிறது.
மின்மடல் முகவரி:
poiyaamozhi2018@gmail.com

புதிய விடுகதைகள்

1. மண்ணில் நட்டால் மணி கொட்டும்
கண்ணில் பட்டால் வாயிலும் சேரும்
சத்தமிடா மணி சக்திதரும் மணி.
அது எது?

2.பார்த்தால் இரும்புக்குண்டு
பிளந்தால் சுவைக்கண் உண்டு
எகிறுபவர்களுக்கு எட்டாக்குண்டு
ஏறுபவர்களுக்கு எட்டும் குண்டு.
அது எது?

3.வெயிலிலும் மழையிலும்
இன்பத்திலும் துன்பத்திலும்
ஒளியிலும் இருளிலும்
உடனிருப்பான் நண்பன்
உணவிட்டால் உண்ணான்
சுவர்க்காரத்தையே உண்பான்.
அவன் யார்?

4.என்பணத்துக்கும் பொன்னுக்கும்
அவன் நல்ல காவல்க்காரன்
கடன் கேட்டால் கையில் பணம்
வைப்பான்
வீட்டில் இருக்கமாட்டான்
வீதியருகே இருப்பான்.
அவன்யார்?

5.தலைப்பாகை கழற்றினால்
கலைவண்ணத்தை வடிப்பாள்
பெண்ணல்ல அவள்
உன்னோடு கூட
அலுவலகம் வருவாள்
உரிய சமயத்தில்
உதவியும் புரிவாள். அவள் யார்?

6.களிமண்ணால் செய்யாத
பாண்டம் அதனுள்ளே
கதிரொளிபடாத கங்கையும் உண்டு
கறந்தபாலின் வெள்ளையும்
உண்டு.
அது எது?

7.எங்கள் வீட்டின் எலி
பூனையல்ல புலி வந்தாலும்
பயமுறாத ரிஷி
மின்னோடு விளையாடும் தனி.
அது எது?

8.செப்புக்குடம் நிறைய செம்முத்து
செந்தளிர் மேனிக்கு மாலையல்ல-
மணிமுத்து
செய்வோர்க்கு பணம் தரும்
வளமுத்து
செவ்வாயுள் முழியும் கனிமுத்து
இது எது?

விடுகதைகளுக்கான விடைகள்

(விடைக்கான சொற்களைமுகம்பார்க்கும் கண்ணாடியால் பாருங்கள் சரியாகத் தெரியும்.)

தமிழர் தொன்மையும் தமிழ் மருத்துவமும்

ஒரு மொழி இருந்தால் அம்மொழியை பேசுகின்ற இனமிருக்கும்.இனமிருந்தால் அவர்களுக்குகென்று, கலாச்சாரம், பண் பாடு,கலைகள் வாழ்வியல் பழக்க வழக் காங்கள், உணவுமுறைகள் என அனைத் தும் தனித்தே இருக்கும் என்பது அனை வரும் அறிந்த ஒன்றே .

உலகிலேயே மிகவும் தொன்மையான மொழி நமது தமிழ் மொழி என்பதை ஆய்வியல் அறிஞர்களும் மற்றும் உலக வரலாற்றுவியல் ஆய்வாளர்களும் ஒப்புக் கொண்ட விடயமாகும். அனைத்திலும் தொன்மையான இனம் நமது தமிழினம். அப்படியிருக்கையில் எப்படி மருத்துவத்தில் மட்டும் நாம் பின்தங்கி இருக்கமுடியும் என்ற கேள்வி இயல்பாகவே நமக்கு எழாமல் இல்லை .

இக்கேள்விக்கு விடைதேடி ஆராய்ந்த பொழுது சற்று அதிர்ச்சியே காத்திருந்தது. அந்த அதிர்ச்சி வேறொன்றும் இல்லை இன்று உலகத்தையே ஆட்டிப்படைக்கும் ஆங்கில மருத்துவத்தின் அடிப்படையே நமது தமிழ் மருத்துவம் என்பதுதான். ஆம் தமிழர்களே! நம் தமிழினத்தின் மருத்துவமுறைதான் இன்றும் உலக முழுவதும் உள்ள மருத்துவமுறை களுக்கே முன்னோடி என்பதை நமது இலக்கியங்களை ஆய்வுக்கு உட் படுத்தும்போது நமக்கு புலப்படுகிறது.

உயிர்மெய் எழுத்தும் உயிர் மூச்சும்

மனிதன் உயிர் வாழ்வதற்கு நாள் ஒன்றுக்கு 21600 முறை விடுகின்ற உயிர் மூச்சின் எண்ணிக்கை, நமது தமிழ் எழுத்துக்களான உயிரெழுத்து பன் னிரண்டும் மெய்யெழுத்து பதினெட்டும் நூறு என்ற எண்ணுடன் சேர்ந்து பெருகினால் நாளொன்றுக்கு மனிதன் விடுகின்ற உயிர் மூச்சின் எண்ணிக்கை வரும்.

12 X 18 X 100 = 21600

மனித உடல் இயக்கத்தை அறிந்த பின்பே தமிழ் எழுத்துகளின் எண் ணிக்கை இவ்வாறு தோன்றியிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருது கிறார்கள்.

உணவே மருந்து

உயிர் மூச்சு இயக்கத்திற்கு உடலும் முக்கிய பங்கு வகிக்கிறது, உடல் இயங்கு வதற்கு உணவு முக்கிய பங்கு வகிக்கிறது

தற்போது சரியான உணவே சரியான மருந்து என்கிறது ஆங்கில மருத்துவம் Right food is right medicine ஆனால், நமது தமிழ் மருத்துவத்தின்

அடிப்படை விதியே அதுதான். உணவு இன்றேல் உடம்பு இல்லை. என்கிறது நமது புறநானூற்று பாடல் (புறநா. 1819-20)

உணவின் சுவையையும் அதன் அளவையும் அறிந்தே ஆறு சுவை உணவை 'அடிசில்' (கற்பியல். 1092) என்கிறது நமது இலக்கியம், அவ்வகை உணவுப்பொருள்கள் எட்டுவகை என்றும் குறிப்பிடுகிறது நமது தொல்காப்பியம். (தொல்.பொருள். 1579)

உணவுப்பொருள் உடலைக் காக்கும் என்றாலும் அதுவே நோயையும் உருவாக்கக்கூடியது. உணவுப் பொருளின் சுவையையும் அதன் குணத்தையும் அவற்றின் அளவையும் உணர்ந்தே அறுசுவை உணவை உட்கொண்டுள்ளனர் தமிழர்கள் என்பதை சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துரைக்கிறது (சிலப்ப. உரை. பக்.102-103)

தமிழ் மருத்துவ உணவின் சுவையை மட்டும் அறிந்திராமல் மருத்துவத்தில் பயன்படுகின்ற மூலிகை, சரக்கு, பாடாணம், மணிகள் ஆகியவற்றின் இயல்பையும் நோயின் குணத்தையும் அறிந்தே உணவுகளை நமது முன்னோர்கள் உட்கொண்டுள்ளனர். நமது தமிழ் மருத்துவத்தின் சிறப்பே வருமுன் காப்பதே சிறந்தது என்ற விதிதான். அதன் அடிப்படையிலேயே தமிழ் மருத்துவம் இயங்கிவருகிறது. சரியான உணவை உட்கொண்டால் எவ்விதமான நோயிற்க்கும் ஆட்படாமல் வாழலாம் என்பதே தமிழ் மருத்துவத்தின் அடிப்படையாகும்.

இயற்கையும் தமிழ் மருத்துவமும்

இயற்கை நமக்கு கொடையாக வழங்கி உள்ள ஐம்பூதங்களான நிலம், நீர்,காற்று,ஆகாயம்,நெருப்பு இவைகளை வைத்தே தமிழ் மருத்துவம் உருவாகியுள்ளது. வானியல், பூதவியல், எண்ணியல், மெய்யியல், உடலியல், உயிரியல், மருந்து, மருத்துவம், தாவரவியல், ஓகவியல், மாறணவியல் ஆகியவற்றை உள்ளடக்கியதே தமிழ் மருத்துவமாகும். இதற்கு சான்றாக தொல்காப்பியத்தில் ஒரு பாடல் உள்ளது

'நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' -
தொல்.மரபியல். (1589.
நோய் அறிதலும் தொல்காப்பியமும்)

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள சிறு, பெரு பொழுதுகளும், ஐந்திணையும், தமிழ் மருத்துவத்தில் சிறப்பு என கூறப் படுகிறது. ஏனெனில் நோய்களைக் கணிப்பதற்குச் சிறுபொழுதுகளும், மருந்துகளைச் செய்வதற்கும் நோய்பரவுதலை அறிவதற்குப் பெரும் பொழுதுகளும், நோயாளர் வாழும் பகுதியைக் கொண்டு அவருக்கு வந்துற்ற நோயை அறியும் முறைகளும் என்று பலவும் தமிழ் மருத்துவத்தில் காணக்கூடியவையாக உள்ளது.

சங்க இலக்கியமான பத்துப் பாட்டுள் ஒன்றான குறிஞ்சிப் பாட்டை இயற்றிய கபிலர் "98 வகையான பூக்களைக் குறிப்பிடுகிறார். அவை அனைத்தும் மருத்துவக் குணங்களைக் கொண்ட மரம், செடி" கொடிகளாகும்.

பூக்களும் முதலுதவிப் பெட்டியும்

போருக்குப் போகும் மன்னர்கள் பூச்சூடிச் செல்வர்களாம் (தொல்.புறம்.5) சேரர் பனம்பூவும் சோழர் அத்திப்பூவும் பாண்டியர் வேப்பம்பூவும் போர் வீரர்கள் வெட்சி, வஞ்சி, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய பூக்களைச் சூடிச் சென்றதன் காரணம் என்ன? இக்காலத்தில், தொழிற்சாலைகளில் முதலுதவிப் பெட்டி

இருப்பதைப்போல மன்னர்கள், மறவர் களும் சூடிச் செல்லும் பூக்கள் போர்க் களத்தில் அவசர சிகிச்சைக்காகப் பயன் படுத்தப்படுபவையாகும்.



பூச்சூடிய போர்வீரன்

ஆயுள்வேதம்

"ஆயுள் வேதமாகிய வைத்திய நூல்கள் தமிழ் மொழியில் அதிகமாக இருக்கின்றன. சித்தர்கள் பதினெண் மரும் ஆயுள் வேத நூல்களை அதிகமாக எழுதியுள்ளனர். அவற்றில் பெரும் பாலானவை இப்போதும் உள்ளன. தமிழ் ஆயுள்வேதமும்சமஸ்கிருத ஆயுர்வேதமும் வேறு வேறானவை. தமிழ் ஆயுள் வேத நூல்கள் பலவற்றை இன்றும் தமிழ் நாட்டில் தஞ்சை சரசுவதிமகால் நூல் நிலையத்தில் காணலாம் என்று உ.வே. சாமி நாதையர் கூறுகிறார்.

"இன்றைய 'தமிழ் மருத்துவம்' முன்பு'ஆயுள்வேதம்" என்றே அழைக் கப்பட்டு வந்துள்ளது.

அறுவைக்கருவியும் தமிழர்களும்

ஆங்கில மருத்துவத்தில் மட்டும் பயன்படுத்தி வரும் அறுவை சிகிச்சை தமிழர்கள் பலகாலம் முன்பே பயன் படுதியுள்ளார்கள். புதை பொருள் அகழாய்வு ஆராய்ச்சியின்படி, சிந்து, கங்கைச் சமவெளிகளில் வாழ்ந்திருந்த பழந்தமிழர்கள், அறுவை மருத்துவ சிகிச்சைக்காக செப்புக் கத்திகளைப் பயன்படுத்தி இருக்கிறர்கள் என்பது தெரியவருகிறது. அறுவைசிகிச்சை மருத்துவத்துக்காகச் செம்பைப் பயன் படுத்தினால் "அது பக்க விளைவுகளை ஏற்படுத்தாது என்னும் அறிவியல் உண்மையைப் பண்டைய தமிழர் அறிந்து வைத்திருந்தை நினைத்து பார்க்கும்போது நமக்கு பெருமிதம் கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. புதைந்துள்ள நாகரிகம், தமிழ் இனத்தவர் மருந்து, மருத்துவம் அறுவை மருத்துவம் ஆகியவற்றை அறிந்தும் பயன்படுத்தியும் வந்திருந்தனர் என்பதை உறுதிப் படுத்துகிறது.

உலகிற்கு தமிழினம் அறிமுகப் படுத்திய அறுவைச்சிகிச்சை வருமாறு.

அறுவை சிகிச்சை

தற்பொழுது பெரிதாக பேசப்படும் அறுவை சிகிச்சை மருத்துவம் தமிழினம் உலகிற்கு கொடையாக கொடுத்த ஒன்று. ஆம் போர்வீரர்களுக்கு ஏற்படுகின்ற புண்கள் பெரிய அளவில் இருந்தால் அப்புண்ணை மருந்துகளால் ஆற்றுவது கடினம் என்பதை உணர்ந்து " மருத்துவர்களால் அப்புண்கள் தைக்கப்பட்டன. அதன் பின்னரே மருந்திட்டுக் கட்டுவதும் நிகழ்ந் துள்ளது. இதுவே இன்றைய நாளிலும் ஆங்கில மருத்துவத்தில் நடை முறை யிலுள்ளது. இவ்வாறு, விழப்புண்ணைத் தைக்கும் முறையைப் பதிற்றுப் பத்து குறிப்பிகிறது.

"மீன்தேர் கொட்பின் பனிக்கய மூழ்கிச்
சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள்ளுசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்" -
(பதிற்றுப்பத்து 5: 2:1-3)

நீரிலுள்ள மீனைக் கொத்துவதற்காக நீரில் பாய்ந்து, அடுத்த நொடியில் நீரை விட்டு மேலே பறந்து செல்லும் சிரல் பறவையைப் போல, நீண்ட வெள்ளுசி புண்ணுக்குள் நுழைந்து வெளியே வருகிறது என்கிறது மேற்படி பாடல் வரிகள். வெள்ளுசி என்பது வெள்ளியால் செய்யப்பட்ட தையல் ஊசியே. இப்படி பல அரிய மருத்துவ அறிவியல்களை உலகிற்கு கொடுத்த இனம் தமிழினம்.

வள்ளுவனும் மருத்துவமும்

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்
செல்வானென்று
அப்பால் நாற் கூற்றே மருந்து" -
(திருக்குறள்-950)

உற்றவன் - நோயுற்றவன் தீர்ப்பான் - மருத்துவன் மருந்து - மருத்துவனின் கருவியான நோய் தீர்க்கும் மருந்து உழைச் செல்வான் - மருத்துவனுக்கும் நோயாளிக்கும் துணையாயிருந்து மருந்தூட்டுபவன் எனப் பொருள் தருகிறது நோயாளி, மருத்துவன், மருந்து, மருத்துவத் துணைவன் இவர்கள் நால்வரும் இருந்தால் மட்டுமே ஒரு நோயை நீக்க முடியும் என்பதே வள்ளுவனின் வாக்கு.

தமிழ் மருத்துவம் தொல்காப் பியத்திற்கு முன்பும் பின்பும் என்று இரு வகைபடுத்தலாம். மயன், இராவணன், திருமூலர், போகர், காலாங்கிநாதர், கோரக்கர் சித்தர், புலிப்பாணிச் சித்தர், இன்னும் பலர் சித்தர்கள் தமிழ் மருத்து வத்தின் முன்னோடிகள் ஆவார்கள். திருமந்திரம், திரிகடிகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் . இன்னும் பல நூல்கள் தமிழ் மருத்துவத்தை தாங்கி நிற்கக் கூடிய நூல்கள் நமது மொழியில் உள்ளன. மனிதர்கள், பறவைகள், விலங்குகள் என அனைத்து உயிரனங் களுக்கும் தமிழினம் மருத்துவம் பார்த்த காக சான்றுகளும் ஆய்வுகளும் உள்ளன. குழந்தை மருத்துவம், அழகுக்கு மருத்து வம், என மருத்துவ பிரிவுகளையும் உள்ளடக்கியதே தமிழ் மருத்துவமாகும். தமிழினத்தின்,மொழி,கலைகள் பண்பாடு கலாச்சரம் , அறிவியல் .இவைகள் மட்டும் தொன்மையானது அல்ல! மருத்துவமும் என்பதையும் இத்தால் அறிய முடிகிற தல்லவா?

–மருத்துவர் . தமிழ் சிலம்பரசன்
தமிழ்நாடு

மாறணக்கலை (Alchemy)

(அகரம் முதல் னகரம் இறுவாய்' தொல். எழுத்து.1)

அகரம் என்னுஞ் சொல்லுக்கு இதள் (Mercury) என்று பொருள். தமிழ் மருத்துவர்கள் அறிந்த மாறணக்கலை யில் அகரம் இன்றியமையாதது.

சித்தர்கள் அகரமாகிய பாதரசத்தைப் பயன் படுத்தி வகார வித்தை (Alchemy) செய்வதில் வல்லவர்கள் என்று உலக மருத்துவ வரலாறு குறிப்பிடுகிறது.

அகரம் உகரம் ஆகிய இரண்டும் மருந்து, வாதம், ஓகம், ஞானம் ஆகிய நான்கு நிலைகளிலும் முதன்மையாகத் திகழ்கின்றன.

ஓகம்

ஓக முறையினை மேற்கொள்ளும் முனிவர்கள் உணரக்கூடிய ஒலி அதிர்வு களை 'வளியிசை' என்று கூறுவர். இந்த நுண்ணதிர்வுகள் ஓகம் புரிகின்றவர் களால் மட்டுமே உணர முடியும். (திருமந். 606) என்பதால், தொல்காப்பிய ஆசிரியரும் ஓகம் புரிந்தவர் எனலாம்.

-சிறுகதை
-தூளையடி சபாரத்தினம்

ஆலமரம்

அவளுடைய மூதாதைகள் "அவளுக்கு" என்று வைத்து விட்டுப் போனது அந்த ஆலமரம் ஒன்றைத் தான். அந்த உடைந்த சட்டி, விளிம்பில்லாத பானை, அடுப்பாக உபயோகிக்கும் மூன்று கற்கள், தென்னம்பாளை- யாவும் அவளாகத் தேடிக்கொண்டவை. அவள் அறிந்தமட்டில் அவளுக்கு இன பந்துகள் யாருமிருப்பதாகத் தெரியவில்லை. அந்த ஆலமரத்தடியிலே இருக்கும் ஒரு நாய்தான் அவளுடைய பந்து. உயிருக்குயிரான காவலாளி யுங்கூட....

காலையில் எழுந்தவுடன் தென்னைப் பாளையினால் அம்மரத்தைச் சுற்றி நன்றாகச் சுத்தம் செய்வாள். அருகே இருக்கும் நீரோடைக்குச் சென்று பானையில் நீர்கொண்டு வந்து, தான் கூட்டிய இடங்கட்குத் தெளிப்பாள். பின் பழைய சோறு ஏதாவது இருந்தால் தானுமுண்டு தன் நாய்க்கும் கொடுப்பாள். பொழுது நன்றாகப் புலர்ந்ததும், அந்த உடைந்த சட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு பிச்சைக்குப் புறப்படுவாள். போகும்போது தன் நாயை வாத்சலயத்தோடு தடவிவிட்டுச் செல்வாள். அதுவும் தன் வாலைக் குழைத்து இருதயபூர்வமான நன்றியைக் கண்கள் மூலம் தெரிவிக்கும்.

தெருத் தெருவாக அலைவாள் - மூலை முடுக்கெல்லாம் போவாள் - யாராவது இரங்கி ஏதாவது உணவு கொடுத்தால், அதைப் பத்திரமாக உண்ணாமல் வைத்துக் கொள்வாள். "ஏன் சாப்பிடாமல் கொண்டு போகிறாய்?" என்று கேட்டால் "நடக்கமுடியாத ஒரு கிழவனுக்குக் கொண்டு போகிறேன்" என்று கூறுவாள். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு ஏங்கியிருக்கும் அந்த நாயின் அருமை அவளுக்கல்லவோ தெரியும். ஆலமரத்தடியில் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் கந்தல்களையும் மற்றப் பொருட்களையும் பாதுகாத்துக் கொண்டிருக்கும் காவலாளி அல்லவா அது.

சுமார் இரண்டு மூன்று மணிக்குத் தன் இருப்பிடம் நோக்கி விரைந்து செல்வாள். அவளுக்கு முன்னால் அவளுடைய உள்ளம் பறந்துகொண்டிருக்கும். தூரத்தில்

வரும் பொழுதே கரிய முகில் கூட்டத் தைப்போல ஆலமிலைகளின் கூட்டம் காட்சியளிக்கும். அவளுடைய உருவங் கண்ணிற்பட்டதும் தாயைக் கண்டவுடன் துள்ளிக்குதித்தோடும் பசுக்கன்றைப் போல் அந்த நாய் ஓடிச்சென்று அவளைத் சுற்றி சுற்றி வாலைக் குழைக்கும். அவளும் அன்போடு அதைத் தடவிக் கொடுப்பாள்.

ஆலமரத்தின் கிழே உட்கார்ந்ததும் அவளுடைய களைப்பெல்லாம் மாயமாய் மறைந்துவிடும். கொண்டு வந்ததை நாயோடு பகிர்ந்து உண்பாள். சிறிது நேரம் சென்றபின் பக்கத்திலுள்ள நீரோடைக்குச் சென்று குளிப்பாள். சுமார் ஆறு, ஏழு மணியளவில் அரிசி இருந்தாற் சோறாக்குவாள். இதற்கிடையில் அவளுடைய நண்பர்கள் - காகங்கள், குயில்கள் முதலியன - கா, கூ என்று ஆரவாரித்துத் தாங்கள் வந்திருப்பதை அவளுக்குத் தெரிவிப்பார்கள். எல்லோருமுறங்கியபின் அவளும் அந்த வேரில் தன் தலையைச் சாய்ப்பாள். அந்த ஆலம்வேர் தான் அவளுடைய தலையனை. அவளுடைய குருட்டுத் தாத்தா உறங்கியதும் அதே வேரில் தலைவைத்துத்தான். சீமேந்தால் மெழுகப்பட்ட சுவரைப்போல அந்தவேர் அழுத்தமாக இருந்தது.

அன்றும் அவள் அதே வேரில் தான் தலைவைத்துக் கொண்டு நிம்மதியாகத் தூங்கினாள். அந்த நாயும் அவளின் காலடியில் தூங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு பயங்கரமான கனவு கண்டு துடித்து எழுந்தாள். வாய் என்னவோ கூறி உளறியது. மரத்தைச் சுற்றி ஒருமுறை வந்தாள். அப்பொழுதும் அவளுக்குத் திருப்தி உண்டாகவில்லை.

நன்றாக ஒருமுறை அண்ணாந்து பார்த்தாள். மரம் மரமாகத்தானிருந்தது. அது முறிந்து வீழ்ந்து விடவில்லை. கண்டது வெறும் கனவாக இருந்தாலும் அவளுடைய உள்ளத்தில் சகிக்கமுடியாத வேதனை குடி கொண்டது. பொங்கி வரும் கண்ணீரை அடக்கினாள். ஆனால், அடக்கமுடியவில்லை. அருகே கவலை தேங்கிய முகத்தோடு நின்ற நாயை அருகிழுத்து அணைத்துக்கொண்டாள். அதுவும் தன்னுடைய நாவால் அவளுடைய கரத்தை நக்கியது. இரவு முழுவதும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

பொழுது புலர்ந்ததும் வழக்கம்போல் சட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அவளுடைய மனம் சஞ்சலப் பட்டது. தான் கண்ட பயங்கரமான கனவை ஒருமுறை நினைத்துப் பார்த்தாள். ஒருவேளை உண்மையில் அப்படி நடந்தால்..... நினைக்கவே அவளுடல் நடுங்கியது. கால்கள் செல்ல மறுத்தன. எத்தனை நாட்களுக்குப் போக மலிருக்க முடியும்? ஒருநாள் பிச்சைக்குச் செல்லாவிட்டால் அவளுடைய கதி என்ன? அவளையே நம்பிக் கொண்டிருக்கும் நாயின் கதிதான் என்ன? மனக்கலக்கத்தோடு புறப்பட்டாள். மரத்திலிருந்து இரண்டு மூன்று பனித்துளிகள் அவள்மேல் வீழ்ந்தன. பரிதாபத்தோடு அண்ணாந்து பார்த்தாள். மறுபடியும் பனித்துளிகள் வீழ்ந்தன. அவள் அதைக் கேவலம் பனித்துளிகளாக நினைக்க வில்லை. "நிராதரவாக என்னை விட்டுவிட்டுப் போகிறாயா" என்று அந்த ஆலமரங்கதறிப் பெருக்குங் கண்ணீர் தான் அத்துளிகள் என்று நினைத்தாள்.

அவள் கண்களும் நீரைச் சொரிந்தன.

அவள் பிச்சைக்குச் சென்றுவிட்டாள். ஆனால் மனம் மட்டும் நிம்மதியாயில்லை. வழக்கத்திற்கு விரோதமாகப் பன்னிரண்டு மணிக்கே இருப்பிடத்தை நோக்கி நடந்தாள். எல்லோருங் கூட்டங் கூட்டமாக நின்று எதையோபற்றி ஆனந்தத்தோடு பேசிக்கொண்டு நின்றார்கள். அதை என்னவென்றறிய அவளுக்குமாசை தான், ஆனால், அவர்களிடம் சென்று அறியக்கூடிய தகுதி அவளுக்கு இல்லை. அவ்வழியால் வந்த ஒரு சிறுமியிடம் விசாரித்த பொழுது, "எங்கள் கிராமத்திற்கு றெயில் பாதைபோடப் போகிறார்களாம். இன்னு மிரண்டு, மாசத்துள் றெயில் ஓட ஆரம்பித்துவிடும் என்று அப்பா சொன்னார்" என்றாள் சிறுமி.

றெயில் வந்தாலென்ன?, ஆகாயக் கப்பல் வந்தாலென்ன? பிச்சைக்காரியாகிய அவளுக்கு இரண்டுஞ்சரிதானே? இருப்பிடத்தை நோக்கி அவள் விரைவாக நடந்தாள்.

"இதென்னடா சனியன்! வேலை செய்ய விடமாட்டேனென்கிறதே" என்றா னொருவன். ஆங்கில உடையில் நின்ற எஞ்சினியரின் கைத்துப்பாக்கி "டுமீல்" என்ற சத்தத்தோடு வெடித்தது. இவ்வளவு நேரமும் மரத்தைச் சுற்றிச்சுற்றித் தன் எஜமானியின் பொருட்களுக்காகப் போரா டிய அந்த நாய் மண்ணிற் சாய்ந்தது.

சுமார் கால் மைல் தூரத்தில் வரும்பொழுதே தென்படும் ஆலமரம் இன்று வெகு சமீபத்தில் வந்தும், அவள் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆலமரம் இருந்த இடம் ஒரே வெளியாக இருந்தது. இரவு கண்டகனவு அவள் ஞாபகத்திற்கு வந்தது. கையிலிருந்த சட்டி "தடா"லென்று வீழ்ந்தது. மரத்தடியை நோக்கி ஓடினாள். அவளுடைய சாமான்கள் ஒரு பக்கத்தில் எறியப்பட்டுக் கிடந்தன. இன்னொரு பக்கத்தில் அவளுடைய நாய் உயிரற்றுக் கிடந்தது. மறுபக்கம் திரும்பினாள். மரத்தின் ஆயுள் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. அடி மரத்துக்கு மாறி மாறி விழும் கோடாரிக்கொத்தைத் தாங்க மாட்டாமல் தவிக்கும்மரத்திலிருந்து உதிரம் பெருகுவது போலிருந்தது அதிலிருந்து வடிந்த பால். "ஐயோ" என்றலறிக் கொண்டு ஓடிப்போய் வீழ்ந்தாள் அதன் அடியில். திடீரென்று ஒரு கோடாரிக் கொத்து அவளுடைய தலையில் வீழ்ந்தது. எல்லோருந் திகைத்துப்போய் நின்றார்கள். வெண்ணிறரத்தமும் செவ்விரத்தமும் கலந்து அடிமரத்தைக் கழுவிக்கொண்டன.

ஜனநாயக நாடுகளில் நிலைத்த அமைதிக்கான முயற்சி

-ஆய்வு நோக்கிலிருந்து-

ஜனநாயக அமைதி

நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு அமைதியை ஏற்படுத்துவதற்கு சர்வதேச ஜனநாயக அரசுகளின் தலையீடும் ஜனநாயக அரசியல், சமூக நிறுவனங்களும் தற்காலத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இருந்தாலும் இந்த வகையில் நீடித்த அல்லது நிரந்தர அமைதி நிலைமையை உருவாக்க முடியுமா என்பது பெரும் கேள்வியாகவே இருப்பதை எம் தேசத்தின் வரலாற்று அனுபவங்கள் உணர்த்துகின்றன. இருந்தாலும் இந்த முயற்சி- முரண்பாடுகளைக் களைந்து மோதல்களை விலக்க முனையும் செயற்றிட்டமாக எமது நாட்டில் மட்டுமல்ல உலகின் பலபாகங்களிலும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இந்த விடயம் பற்றி பல அரசியல் ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு ஜனநாயக அமைதியின் பண்புகளை பற்றி எடுத்துக்காட்டியுள்ளனர். அத்தகைய சில விடயங்களை நாமும் கற்றறிந்துகொள்வோம். ஏனெனில் எமது நாட்டிலும் தேசிய இனங்களுக்கிடையில் பிரச்சினை இருப்பது என்பது உலகறிந்த விடயம்.

இது தொடர்பாக பிரபல ஆய்வாளர் காட்ஸ்கியின் கண்டுபிடிப்பு யாதெனில், "ஜனநாயக ஆட்சிகளுக்கிடையில் மிக அரிதாகவே போர் மூழ்கிறது என்றும் ஆகக் குறைந்தது இரண்டு தாராளவாத ஆட்சியாளர் அல்லது தேசங்களுக்கிடையேயாவது இந்த ஜனநாயக வழிமுறையிலான அமைதி சாத்தியப்



படுகிறது" என்று அவர் தெரிவிக்கிறார். இதனால் அவர் இதை தாராளவாத அமைதி என்றும் தலைப்பிடுகிறார்.

அத்தோடு "இந்த அமைதிச் செயற்திட்டமானது ஏராளம் விளங்கங்களைக் கொண்டுள்ளதுடன், பொருள்வயமாக நோக்குகையில் இரு முரண்பட்ட சமூகங்களுக்கிடையில் அல்லது அந்த சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தாராளவாத அரசியல் தலைமைகளுக்கிடையில் கருத்தொருமித்த செயற்பாடுகள், ஜனநாயக அமைதி என்பன ஆச்சரியம் ஊட்டத்தக்கவகையில் மிகமிக மெதுவானதாக நடக்கின்றன" என்றும் குறிப்பிடுகிறார். இச்சமயத்தில் சில உதாரணங்களை நாம் ஞாபகங்கொள்ள முடியும் அவையாவன- அரசியல் தலைவர்களால் வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும். நடந்த இழப்புகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்படுக்கொண்டிருக்குமே தவிர இழப்பைச்

சந்தித்த மாநிலத்துக்கு அல்லது தேசத் திற்கு இழப்பீடுகள், நிவாரணங்கள், புனர்வாழ்வு நடவடிக்கைகள் வேண்டப் பட்ட அளவு வழங்கப்பட்டிருக்காது. மேலும் முரண்பாட்டுக்கான காரணி களை அகற்றுதல் போன்ற செயற்பாடு களில் அதிக அக்கறை செலுத்தப்பட்டிருக் காது. அவ்வாறு சில நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தாலும் அவை மிக மெதுவாகவே நடக்கும். மேலும் அமைதி தொடர்பான வேலைத்திட்டத்துக்காக அடிக்கடி வெளிநாட்டு இராஜதந்திரிகள் வந்துபோவார்கள், உள்ளூர் இராஜ தந்திரிகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வார்கள். மொத்தத்தில் இந்த வகையில் நேரமும் நிதியும் வீணாக் கப்படுவதும்- மக்கள் விசனமடைவதும் தான் உண்மைநிலை.

முதலாளித்துவத்தை அடிப்படை யாகக் கொண்ட தாராளவாத அமைதி யையும் பொதுவான இடைநிலை நலன்களையும் பொறுத்து சில கொள்கை களை காட்ஸ்கி தருகிறார். அவையாவன,

"1. பொருண்மிய அபிவிருத்தி,

2.மூலதன சந்தை ஒருங்கிணைப்பு

3.இணக்கப்பாடான வெளியுறவுக் கொள்கை விருப்பங்கள்

ஆகிய மூன்றும் ஜனநாயக அமை தியின் நியம புள்ளிவிவரவியல் சோதனைகளினுள்(ஜனநாயக) குடியாட்சி விளைவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துகின்றன".

அதாவது, காட்ஸ்கியின் வாதத்தில், பல சமூகப் பொருளாதார விளைவுகள் கருத்தில் கொள்ளப்படுகிறது என்பதை ஊகிக்க முடிகிறது. அவர் "உண்மையில் -பிராந்தியப் பன்முகத் தன்மையைக் கட்டுப்படுத்தியபின்பு, மேற்சொன்ன மூன்று மாறிகளில் (காரணங்களில்) ஏதோ ஒன்று, முன்னைய ஆட்சிவகைக் குக் காரணமாக இருந்த போர், இராணுவ மயமான மோதல்கள், மற்றும் பயங்கரவா தங்களை கணிப்பதற்குப் போதுமானமாக இருக்கிறது.

அதே நேரம் நாடுகளுக்கிடையிலான அல்லது மாநிலங் களுக்கிடையிலான இணக்கமற்ற நலன்கள், தோல்விகள், வீணான பேரம்பேசுதல், என்பவற்றால் தான் போரானது உற்பத்தி செய்யப் படுகிறது" என்கிறார்.

"மாறாக மாநிலங்களின் வேறுபாடு களைக் குறைப்பது, கடும் முரண்பாடுகள், மோதலுக்குரியவைகளைத் தவிர்ப்பது, சாதகமான வெற்றிகரமான இராஜதந்திர நடவடிக்கைகள் இடம்பெறுதல் ஆகிய நிலைமைகளில் அமைதியானது பரவக் கூடியதாக அல்லது நீடிக்கக்கூடியதாக உள்ளது" என்றும் காட்ஸ்கி கூறுகிறார்.

"மத்திய அரசினால் மாநிலத்தின் நலன்கள் மிகக் குறுகியதாக அல்லது ஒடுங்கியதாக வரையறுக்கப்படும் பொழுதும் வாக்குறுதிகள் மட்டுமே உறுதியான பயன் விளைவுகளாக இருக்கும்பட்சத்திலும் இயல்பாகவே மாநிலத்தின் நலன்கள் இணக்கமின்றி அல்லது முரண்நிலையில் உள்ளதாக ஜதார்த்தவாதிகளும் மற்றவர்களும் விவாதிக்கிறார்கள்" என்றும் அவர்சொல்ல விளைகிறார்.

மேலும் பொருத்தமான முதலாளித் துவப் பொருண்மிய நிலைமையின் ஆகக்குறைந்த மூன்று காரணங்களால் அமைதி உருவாக்கப்படலாம் என்றும் பல ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அதன்படி, அந்த மூன்றில் முதலாவ தாக இங்கு தரப்படுவது, "பிராந்திய விரிவாக்கத்தின் வரலாற்று உத்வேகம் அல்லது தாண்டலானது, அறிவியல் சார்

முன்னேற்றங்கள், நிதி மூலதனம் இன்னும் பல நுணுக்கமான காரணிகள் உள்ளீர்க்கப்படுதலின் முக்கியத்துவத் தினால் உறுதியாக உயர்வடைகிறது. வளங்களுக்கான போட்டி, சந்தை ஊடாக அதிகமாகக் கடைப்பிடிக்கப்படும் பொழுது, இராணுவ ஆக்கிரமிப்பு நிலைமையில் இருந்ததிலும்பார்க்க பொருளாதார முன் னேற்றகரமான நிலைமைகள் தோன்று கிற அதேவேளையில் அபிவிருத்தியானது, உண்மையில் இணக்கமற்ற கொள்கை கள் நோக்கங்கள் இருக்கிறபொழுதும் நாட்டின் அல்லது மாநிலத்தின் செயற் றிறனை, ஆற்றலை அதிகரிக்கிறது." என்றும் அவர்களின் ஆய்வுகள் தெரி விக்கின்றன.

இரண்டாவதான விடயம், இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பிந்திய காலப் பகுதியில் வளர்ச்சியடைந்த நாடுகள் முரண்படும் நோக்கங்களையும் அதன் அளவையும் கணிசமானளவு தமக்கு கிடையே கட்டுப்படுத்தின. சர்வதேச அமைப்பானது, பிராந்தியப் பதட்டம் இல்லாத ஒத்துழைப்பை வழங்குகின்ற, சிறியவேறுபாடுகளுக்கும் ஒன்றுக் கொன்று இடமளிக்கின்ற, தாராளவாத நாடுகளை அல்லது தேசங்களை ஒருவாறு ஒழுங்கமைத்துள்ளது. ஆயினும் தாராள வாத நாடுகளுக்கிடையான இந்த இணக்கம் அடுத்த நூற்றாண்டிற்கும் நீடித்திருக்குமா என்பது உறுதியாகச் சொல்லமுடியாது" என்பது அவர்களது கருத்தாக இருக்கிறது.

"மூன்றாவதான விடயம்யாதெனில், உலக மூலதனச் சந்தையின் எழுச்சி யானது, போட்டி மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றுக்கான புதிய வழிமுறை களை அல்லது பொறிமுறைகளை நாடுகளுக்கிடையில் உருவாக்குகிறது. அல்லாதுபோனால், அது போராடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம். அத்தகைய இச் செயற்றிட்டங்கள் நவீன உலகில் போர் வடிவங்களில் தனியான செல்வாக்குச் செலுத்துகின்றன." என்றும் அதேசமயம் தாராளவாதிகள், 'அபிவிருத்தியடைந்த உலகில் போர் இல்லாத நாடுகள்' என்பது பற்றியும் பேசுகின்றது." என்றும் இந்த "போர்த் தணிப்பு முயற்சி, போருக்கு நிர்ப்பந்திக்கப்படுதல் ஆகிய இரட்டை நிலைமை ஜனநாயக அமைதியில் அவதானிக்கப்படக்கூடியதாக உள்ளது." என்றும் காட்ஸ்கி எடுத்துக்காட்டுகிறார்.

ஜனநாயக சமாதானம் என்பது சமூக பொருளாதார அபிவிருத்தியுடன் தொடர்பு டையதாகவுள்ளது என்று காட்ஸ்கியின் விளக்கம் இருக்கையில் வேறு சில ஆய்வாளாகள். அதேபோன்று நிறுவன ஒருங்கிணைப்பு என்பதும் ஜனநாயக அமைதியில் முக்கியமான இடம்பெறு கிறநிலைகளையும் சுட்டிக்காட்டியுள்ள னர். இதனால், அதுபற்றியும் இங்கு சற்று சுருக்கமாக நோக்கலாம்.

நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு

(நிறுவன ஒருங்கிணைப்பின் முக்கியத்துவம் கருதி ஜனநாயமும் ஆயுத முரண்பாடும் என்ற 'ஹேவார்ட் ஹெக்ரே' என்பவரது ஆய்வறிக்கை யிலிருந்து இந்தப்பகுதியைத் தருகிறோம்- அரசியல் நிறுவனங்கள் என்பது சட்டபூர்வ அதிகாரம் கொண்டஅமைப்புகள் (காவல் துறை), நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைப்புகள் (பாராளுமன்றம்), நீதித் துறை (மாவட்ட நீதவான் நீதிமன்றங்கள், மேல்நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றம் ஆகிய முக்கியமானவற்றைக்குறிக்கிறது.

"நிறுவன ஒருங்கிணைப்பின் ஒரு சாத்தியமான அறிகுறி என்னவென்றால்,

அரசுகளுக்கிடையிலான ஜனநாயக சமாதானம் என்பது, புதிதாகத்தோற்றம் பெற்ற மக்களாட்சி நாடுகளில் (ஜன நாயகத்திற்கு) பலவீனமாக இருக்கிறது (மாஸ்ஸீம் ரூஸ்டும், 1992).

உண்மையில் குறுகியகால இடை வெளியிலான மக்களாட்சியாக்கல் (ஜன நாயகமயமாக்கல்) செயற்பாடு (மேன்சீல்ட் ரூ ஸ்னைடர், 1995) யுத்தத்தின் அபா யத்தை அதிகரிக்கக்கூடும். ஒரு நாட்டின் அரசியல் நிறுவன அமைப்புகளில் ஏற் படும் மாற்றங்கள் உள்நாட்டுக் கலகங் களின் உச்சநிலைக்கு வாய்ப்பளிக்கலாம். (உ.ம். ஸ்னேடர், 2000 ஹெகிரெ மற்றும் பலர், 2001-பியரான் ரூ லெய்டின், 2003 செடர்மேன், ஹுக் ரூ கிரெப்ஸ், 2010). என்பது இங்கு குறிப்பிட்ட சில ஆய்வா ளரது கருத்தாக உள்ளது.

"முதலாவதாக, ஒரு ஜனநாயக வழிநடத்துதலில் ஏற்படும் மாற்றங்கள், அடக்குமுறையைத் தளர்த்த வாய்ப் பிருக்கிறது, அதேசமயம் இது இனவாத குழுக்களை அணிதிரட்டவும் அனுமதிக் கிறது." என்பதும் இவ்வாய்வாளரது கண்டுபிடிப்பாக உள்ளது. இக்கண்டு பிடிப்பு உண்மையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதே ஏனெனில் இலங்கையிலும் இந்நிலை காணப்படுகிறது அதாவது ஒரு நீடித்த அமைதியான தீர்வுக்கு முயலுகை யில் பெரும்பான்மை இனத்தின் சுயநலவாத அரசியல்கட்சிகளைச் சேர்ந்த வர்கள், இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளுக்கு முனைவதை செய்தி கள் தெரிவிக்கின்றன.

"பெரும்பாலும், போதுமான ஆற்ற லுள்ள புதிய அரசியல் நிறுவனங்களை உருவாக்குவதற்கு நீண்ட காலம் எடுக்கிறது. இந்த கால அவகாசம் ஆழ மான சமூக மோதல்களுக்கு இடமளிக் கிறது. அரசியல் செல்வாக்கு அதிகரிக்கிற பொழுது சமூகங்கள், இனக்குழு தங்கள் வாழ்க்கை நிலைமைகளில் உண்மை யான முன்னேற்றங்களை எதிர்பார்க்கின் றன. ஆனால், பொருள்வயமாக இவை மிகமெதுவாகவே நடக்கிறது. அரசியல் நிறுவனங்களின் மாற்றங்களினால் இழப்புக்குள்ளான இனக்குழுவோ, முந்தைய நிலைமைகளை மீளமைக்க ஆயுதமேந்திய கிளர்ச்சிகளை தூண்டு வதற்கான ஒரு ஊக்குவிப்பைக் கொண்டி ருக்கின்றது. (அரசியல் நிறுவனங்க ளானவை சட்டம், பொருளாதாரம், கலாசாரம், சமுதாயம் போன்ற எல்லா வற்றின் மீதும் தாக்கம் செலுத்துகின்றன) என்பதும் ஆய்வாளரின் மேலும் ஒரு கருத்தாகும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை இந்நிலை காணப்பட வில்லை. ஏனெனில் பாதிப்பக்குள்ளான இனக்குழு மிகநீண்ட காலமாக ஜனநாயகவழிப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்திவருகின்றது என்பது கண்கூடு.

"உள்முரண்பாடுகளைக் கண்டு பிடித்து விளக்குவது அரசநிறுவனங் களின் இயல்புக்கு அமைவானதல்ல. ஆனால், ஒரு தொகுதியின் அமைப்பின் மேலாக அடிப்படை முரண்பாடுகளைக் கொண்டிருத்தல் பலவீனமான ஆட்சி வகையான "அனோக்கிறேசிஸ்" அல்லது பகுதி ஜனநாயக ஆட்சிமுறையைக் குறிக் கிறது. அது வெற்றிகரமான தன்னாட்சி யாளராவதற்கான வளங்களைக் குறைக் கிறது, அல்லது அது உறுதியற்ற அரசியல் சக்திகளின் ஒரு கலவையைக் கொண்டி ருக்கிறது. இந்த உறுதியற்ற தன்மை (அதிகாரத்தின் அண்மைய ஒழுங்கற்ற மாற்றங்கள்) என்பது உயர்வான முரண் பாட்டு நெருக்கடிகளை இணைக்கிறது.

மேலும், அதை கட்டுப்படுத்தும் போது, ஜனநாயகம் மற்றும் முரண் ஆபத்துக்கள் இடையே ஒரு தனித்துவமான எதிர்மறை உறவுவையும் கொண்டுள்ளது." இத்த கைய நிலையானது இலங்கையின் இன்றுள்ள அரசியல் நிலையை உதார ணமாகக் கூறக்கூடிய வகையில் உள்ளது.

தேர்தல்கள் ஒரு சிறப்பு மாற்றத்தை வழங்குகின்றன. அது எப்படியெனில் அவை அரச நிறுவனங்களுக்கு அல்ல. தேர்தல் ஆணையங்களுக்குள் அதி காரத்தை பகிர்ந்தளிக்கின்றன. பொதுவாக புதிய குடியாட்சி நாடுகளில் (ஜனநாயக நாடுகளில்) ஆட்சியாளர்கள், உண்மை யிலேயே தேர்தல்களின் விளைவுகளை மதிப்பதில் உறுதியுடன் இருக்கிறார்களா? என்பதில் கணிசமான நிச்சயமற்ற நிலை உள்ளது. பெரும்பான்மையானவர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் அதிகாரத்தை பாதுகாக்கவே விரும்பு கின்றனர், ஏனெனில் அது அவர்களின் ஆட்சியின் சட்டபூர்வமான தன்மையை அதிகப்படுத்துகிறது. இவர்கள், அதி காரத்தை இழக்கையில், தோல்வியை ஏற்றுக்கொள்வதிலும் பார்க்க வலுக் கட்டாயமாக மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியுடையவாராகவே காணப்படலாம். பல ஆய்வுகள், தேர்தல் களானது அதிகரித்த உள்நாட்டு மோதல் அல்லது இன முரண்பாட்டு நெருக்கடி யினால் பின்தொடரப்படுவதை உறுதிப் படுத்துகின்றன." என ஆய்வாளர் ஹேவார்ட் ஹெக்ரே குறிப்பிடுகிறார்.

உண்மையில் இவை ஆய்வு களுக்கப்பால் உண்மையான, வெளிப்ப டையான நிகழ்ச்சிகளாக உலகநாடுகள் பலவற்றில் நடந்தேறிவருவதை நாம் செய்திகள் வாயிலாக அறிந்து வரு

கிறோமல்லவா?

இலங்கையிலும் ஆயுதப்போர் முடிந்து ஒரு தசாப்த காலத்தை நெருங்கும் நிலையிலும் மாறிமாறி ஆட்சிக்கு வரும் பெரும்பான்மையினக் கட்சிகள் தமது ஆட்சியைத் தக்கவைப் பதற்கு இனமுரண்பாட்டை ஒரு கருவி யாகப் பயன் படுத்துகின்றன. இந்த அடிப்படையில் இழப்புகளைச் சந்தித்த தேசத்தில் பதற்ற நிலைகளை அடிக்கடி தோற்றுவிக்கவும் அதன் ஊடாக இராணுவ மேலாதிக்கத்துக்கான -போலி நியாயங்களை சர்வதேசங்களுக்கு கற்பிக்கவும் இழப்புக்குள்ளான மக்களின் ஜனநாயக வழியிலான போராட்டங் களைத் தொடாந்தும் அடக்கியொடுக்கு வதற்கும் வசதிவாய்ப்புகள் பெருக்கப் படுகின்றன. ஜனநாயகம் என்பதன் குடியாட்சியைக் குறிக்கிறது. அதற்கான நிறுவனங்களின் வேலை, மக்களுக் காகப் பணிபுரிவதுதானே. அது எங்கே நடக்கிறது? எல்லாமே பணம், பொருள் ஆடம்பர வாகனங்கள் போன்ற இலாபத்தை ஈட்டுவதற்கான பேரம்பேசல் களை நோக்கமாகக் கொண்ட வியாபார நிறுவனங்களாக பரிணமித்துக் கொண்டி ருக்கின்றன என்றுதானே எண்ணத் தோன்றுகிறது.

-தாரகன்

Solution for word search



(Over,Down,Direction) BLACKBOARD(1,1,SE) BUS(7,1,E) CAR(4,5,SE) CAT(10,13,NW) CHAIR(1,12,E) CLASSROOM(11,6,S) COW(15,6,N) DESK(4,1,SW) DUSTER(10,7,N) GOAT(13,1,S) HOME(5,7,W) KETTLE(8,13,NW) KITCHEN(7,2,SW) POT(5,11,NE) SCHOOL(1,6,NE) TEACHER(7,13,W) TRAIN(5,4,SE)

மாணவர்களே, நீங்களும் கீழுள்ள படம் போலவோ அல்லது வேறு நல்ல படங்களையோ வரையுங்கள். அதை எமக்கு அனுப்புங்கள் நாங்கள் பிரசுரிக்கிறோம்.



அனைவரது தொடர்புக்குமான மின்மடல் முகவரி:

poiyaamozhi2018@gmail.com

விலை 50.00 ரூபாய் மட்டும்

இந்த இதழ் யாழ்.பொய்யாமொழிக் குழுமத்தால் வெளியிடப்படுகிறது.
பதிப்புரிமை பொய்யாமொழிக் குழுமத்துக்கு மட்டுமே.